15வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 05 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 01, 2005



03 சமையலறைக் காற்றகற்றி



15 மூன்றாம் பக்கம்



அனைத்துலக மகளிர் நாள் மார்ச் 08, 2005

# கனடிய மத்திய அரசின் வரவு செலவுத்திட்டம் - ஒரு கண்ணோட்டம்

*கனடியப் பிரதமமந்திரி போல் மாட்டினின் சிறுபான்மை அரசு தனது முதலாவது வரவுசெலவுத் திட்டத்தை (Budget) பாராளுமன்றத்துக்கு பெப்ரவரி 23இல் சமர்ப்பித்தது. இது நிதி மந்திரி ரால்ஃப் கோடோல் இன் இரண்டாவது வரவு செலவுத்திட்டமும் கூட. வரவுசெலவுத்திட்டம் எல்லோரையும் திருப்திப்படுத்த முயன்றிருக்கின்றது. அடுத்த ஐந்தாண்டு களுக்குச் சமநிலை வரவுசெலவுத் திட்டம் எதிர்பார்க்கப்படும் என்று இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை கூறுகின்றது.*

*கனடாவில் தொடர்ந்து சமநிலை வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படுவது இவ்வாண்டுடன் எட்டு வருடங்கள் ஆகும். மக்களின் வளர்ச்சியில் பணத்தைச் செலவிட்டு, உலக நாடுகள் மத்தியில் கனடாவின் பங்கை அதிகரிக்கச் செய்வதும், கனடிய பொருளாதாரத்தை வளப்படுத்துவதுமே இவ்வாண்டு சமநிலை அறிக்கையின் நோக்கங்களாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*2005இல் 2.9 சதவீதமும் 2006இல் 3.1 சதவீதமும் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேய்ந்து வரும் அமெரிக்க நாணயத்தின் மதிப்பு கனடிய ஏற்றுமதியாளர்களுக் கு அழுத்தத்தையும் கஷ்டத்தையும் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.*

*மேலும் வரவுசெலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சில முக்கிய விடயங்கள்:*

- *பாதுகாப்பு அமைச்சுக்கு 13 பில்லியன் டொலர்.*
- *மருத்துவ வசதிக்கு என்று மேலும் 805 மில்லியன் டொலர்.*
- *பூர்விகக்குழுக்களுக்கு வலுவூட்ட 735 மில்லியன் டொலர்.*
- *கலை, கலாசாரத்துக்கு என மேலும் 669 மில்லியன் டொலர்.*
- *புதுக்குடிவரவாளர்களைக் குடியமர்த்த அடுத்த ஐந்தாண்டு களுக்கு என 398 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.*
- *மத்திய ஆராய்ச்சிக்குழுக்களுக்கு என கூடுதல் நிதி ஒதுக்கீடு 375 மில்லியன் டொலர்.*
- *விளையாட்டுத்துறைக்கு ஒதுக்கீடு 170 மில்லியன் டொலர்.*
- *பெற்றோலிய எரிபொருள் வருமானத்தில் 5 பில்லியன் ரொறன்ரோ உள்ளிட்ட எல்லா நகரங்களுடன் பகிர்ந்து*

தொடர்ச்சி 02ம் பக்கம்

# இலங்கையை அசத்திய இளவரசரின் கிழக்கு பயணம்



இலங்கை அரசியல் வாதிகள் அதிர்ச்சி. பிரிட்டிஸ் இளவரசர் சார்ள்ஸ் மட்டக்களப்பு சென்றார்

இலங்கை சென்ற பிரிட்டிஸ் இளரவரசர் சார்ள்ஸ், கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இருந்து நேரடியாக மட்டுநகருக்கு உலங்கு வானூர்தி ஊடாக சென்றடைந்தார். ஆறு மணித்தியாலங்கள் மட்டுமே இலங்கையில் தங்கியிருக்கும் இளவரசர், உடனடியாக இந்த பயணத்தை மேற்கொண்டார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் இளவரசரை உத்தியோக பூர்வமாக வரவேற்றார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டிக்கழியில் அமைக்கப்படும் தற்காலிக குடியிருப்புகளை இளவரசர் பார்வையிட்டார். இவை செஞ்சிலுவை சங்கத்திற் கூடாக அமைக்கப்படுகின்றன. இளவரசர் சாள்ஸ் பிரிட்டிஸ் செஞ்சிலுவை சங்கத்தின் தலைவரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. கொழும்பு அரசியல் தலைமைகள் எதையுமே சந்திக்காமல் இளவரசர் கிழக்கு மாகாணம் சென்றது இலங்கை அரசியல் வாதிகளில் இடையில் அதிர்சியை ஏற்படுத்தி உள்ளது.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$45.00/ Month
- Up to 700 Min Free
- Evenings & Weekends Free
- 2 Year contract
••• Offer Ends without notice •••
Family plan $40.00/ M/2 phones
•100 Min Daytime to share /Weekend Free
• Upgradable for Free Evening with more Min 2500 Min Free
• between 2 phones V/M, C/W, C/C Free
• Buy one phone as low as $49.99 & 2nd Free
••• 2 year contract
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ON M1B 5P9, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# பெண்களின் தனித்துவம்

**பெரி. முத்துராமன்**



1977இலிருந்து மார்ச் 8 மகளிர் தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. பெண்களின் முன்னேற்றம் மற்றும் சமத்துவம் பற்றிய திட்டங்களும், ஆய்வுகளும், சிறப்பு நிகழ்ச்சிகளும் இந்த வாரத்தில் உலகம் முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. கனடாவில் மார்ச் 6 முதல் 12 வரை மகளிர் தின வாரம் கொண்டாடப்பட உள்ளது.

பெண்கள் தனித்துவப் பட்டவர்களா? ஆண்களுக்கும், பெண்களுக்கும் என்ற வேறுபாடு நிதியம், தொழில் போன்ற துறைகளில் பெண்கள், ஆண்களிலிருந்து வேறுபடுகிறார்களா? மகளிர் தினத்தை முன்னிட்டு நாமும் ஆராய்வோம்.

முதலில் நமக்குத் தென்படுவது ஆண்களை விட பெண்கள் உலகம் முழுவதும் அதிக காலம் வாழ்கிறார்கள் என்பதே ஆகும். சராசரியாக ஒரு ஆணைவிட ஒரு பெண் ஏழு ஆண்டுகள் அதிக காலம் வாழுகிறாள். உலகம் முழுவதும் தேர்வுகளில் வெற்றி விகிதாச்சாரத்தை கவனித்தீர்களேயானால் ஆண்களை விட பெண்களே அதிகமாயிருப்பதை உணர்வீர்கள். இயல்பிலேயே பெண்கள் எதையும் எடுத்தோம் கவிழ்தோம் என்று செய்வதில்லை. ஆனால் எந்த விதிக்கும், விதிவிலக்கும் உண்டு. பொதுவில் ஆண்களைவிட பெண்களே திட்டமிட்டுச் செயலாற்றுவதாக உளவியலாளர்கள் கூறுகிறார்கள்.

நிதியத்தை எடுத்துக் கொண்டால் ஆபத்தான ஆனால் வேகமாக வளரக்கூடிய பங்குச் சந்தை முதலீடுகளில் பெண்களை விட ஆண்களே அதிகம் முதலீடு செய்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மற்றவர்களிடம் ஆலோசனை கேட்டு ஒன்றைச் செய்வதிலும் ஆண்களை விட பெண்களே முன்னணியில் இருக்கின்றனர். ஆண்கள் துணிகரமானவர்கள், பெண்கள் நிதானப்போக்கினர் என்று கொள்ளலாமா? வாழ்க்கைக்கு இரண்டும் தேவைதான்? எப்போது எந்த அளவுக்குத் தேவை என்பதை இடம், பொருள், காலம் அறிந்து தீர்மானிக்க வேண்டும்.

வியாபார உலகம் ஆண்களின் உலகமாகவே தென்படுகின்றது. பெண்களின் பங்கு அதிகரிக்க இன்னும் இடம் உள்ளது. இந்த ஆண் உலகில்

**செய்யும் தொழிலில் வெற்றி பெற**

வெற்றி பெற்ற பெண் தொழில் அதிபர்களும், மேலாளர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

இவர்கள் தடைகளைக் கடந்தவர்கள், கனவுகளைச் சுமந்தவர்கள். கனவுகளை நனவாக்க முயன்று வென்றவர்கள். இத்தகைய பெண்களின் சுபாவம் எத்தகையதாக உள்ளது என்று பார்ப்போம்.

1. சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தன்மை. ‘ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு’.
2. தனக்குத்தானே எஜமானனாய் இருக்க விரும்புதலும், அதற்கான செயல்பாடும்.
3. கடின உழைப்பிற்கான மனஉறுதி.
4. துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் இடையிலும் தளராத மனம், தன்னம்பிக்கை.
5. ஒழுங்குமுறை, கட்டுப்பாடு, சலனங்களுக்கு ஆட்படாததன்மை.
6. தீர்க்க ஆராய்ந்து சரியான முடிவு எடுத்தல்.
7. மாற்ற முடியும் என்ற நம்பிக்கையும், அதற்கான உழைப்பும்.
8. தொழில் வழிதுறைகளை விட முடிவுகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. தன்தொழிலில் வெற்றி தரக்கூடிய வழிகளைக் கண்டறிந்து பக்குவமாகக் கையாளல்.
9. எல்லாவற்றிற்கும் மேலாக “இலாபத்தின்” மேல் இந்த நவாம்சங்களைக் கைக்கொள்வதை விட மாதம் முடிந்தால் சம்பளக் காசோலையைப் பார்ப்பதே சிறந்ததாகப் பலருக்கும் உள்ளது. நீங்கள் எப்படியோ?

சில ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் மும்பைத் தொலைக்காட்சி ஒன்றில் பார்த்தேன். ஒரேஒரு அறையில் வசிக்கும் (பம்பாயில் இட நெருக்கடி அதிகம்) ராக்ஸி ஓட்டுனர் (Taxi Driver) ஒருவரின் மகள் தொலைக்காட்சியில் உனது கனவு என்ன என்று கேட்டபோது நல்ல ஆங்கிலத்தில் தன்னம்பிக்கையோடு அளித்தபதில்தான் நினைவிற்கு வருகின்றது. “நானும் உங்களைப்போல் தொலைக்காட்சியில் மக்களுக்குச் சேவை செய்யும் நாள் வெகுதொலைவில் இல்லை”. இட நெருக்கடியோ, பண நெருக்கடியோ அந்தப் பெண்ணின் கனவுகளைப் பாதிக்கவில்லை. அவள் ஒரு நம்பிக்கை நட்சத்திரம்.

# கனடிய மத்திய அரசின் வரவு செலவுத்திட்டம் - ஒரு கண்ணோட்டம்

01ம் பக்கம் தொடர்ச்சி

கொள்ளப்படும்.

தனிநபரைப் பாதிக்கக்கூடிய சில வரி மற்றும் வருமான விடயங்களைப் பார்ப்போம்.

வருவாய் குறைந்த முதியோருக்கு வழங்கப்படும் தொகை (Guaranteed Income Supplement) ஜனவரி 2007 முதல் தனிநபருக்கு 36 டொலரும், தம்பதியினருக்கு 58 டொலரும் என அதிகரிக்கப்படுகின்றது. திருப்பித்தரப்படாத வரி வரவுகள் (Non Refundable Tax Credits) அதிகரிக்கப்படுகின்றது. இப்போது இருக்கும் தொகை 8,148 டொலர். இது படிப்படியாக அதிகரிக்கப்பட்டு 2009இல் 10,000 டொலராக அதிகரிக்கப்பட உள்ளது. இதேபோல ஆர். ஆர். எஸ்.பிக்கான ஆண்டு அதிகப்படியான வரையறையும் இப்போதைய 16,500 டொலரிலிருந்து 22,000 டொலராகப் படிப்படியாக 2010ஆம் ஆண்டுவரை உயர்த்தப்பட உள்ளது. ஆர்.ஆர்.எஸ்.பி. போன்றவற்றில் வெளிநாட்டு பங்குச்சந்தை முதலீடாக அதிகபட்சமாக இதுவரை 30சதவீதமே முதலீடு செய்ய முடியும் என்ற கட்டுப்பாட்டு நிலை இருந்து வந்தது. இப்போது அந்தக் கட்டுப்பாடு முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளது.

வேலைசெய்யும் தகுதியிருந்தும் இயலாதவர்களுக்கு (Disability) வரி வரவிலும் பலமாற்றங்களும் சலுகைகளும் செய்யப்பட்டுள்ளன.

தனிநபருக்கு மருத்துவ இனங்களில் நன்மை பயக்கும் வகையில் பற்பல சிறுசிறு திருத்தங்களும் மாற்றங்களும் இந்த வரவுசெலவுத்திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. பயணப்பாதுகாப்பு வரியும் சற்றே குறைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் ஸ்ரீபன் ஹாப்பரும் மற்ற எதிர்க்கட்சியினரும் பெரிய அளவில் இந்த வரவுசெலவுத்திட்டத்தைக் குறைகூறாததில் இருந்து எல்லோரையும் திருப்திப்படுத்தும் நோக்கம் நிறைவேறியிருப்பதாகத் தோன்றுகின்றது.


உங்கள் வரித்திட்டமிடல், மற்றும் வரிப் படிவங்களை வருமானவரித் துறைக்குச் சமர்ப்பிக்க தொடர்பு கொள்ளவும் பெரி. முத்துராமன்
Successbizsolution, 416-430-0623




## கிழக்கில் விடுதலைப் புலிகள் மீது துப்பாக்கிச் சூடு

### அரசியல் துறைப்பொறுப்பாளர் குவேனியும் காயம் அடைந்தார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மற்றும் மூன்று பெண் போராளிகள் மீது இனம் தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பி ஓடியுள்ளனர்.

திங்கள் மாலை ஆறுமணி முப்பது நிமிடம் அளவில், அக்கரைப்பற்று, பொத்துவில் வீதியில் உள்ள தம்பட்டை என்ற இடத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. சம்பவத்தை தொடர்ந்து இவர்கள் மட்டு. வைத்தியசாலை அவசரப்பரிவில் அனுமதிக்கப் பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிகழ்ந்த திலீபன் மருத்துவ மனை திறப்பு விழாவில் கலந்து கொண்டுவிட்டு இவர்கள் ஆட்டோ ஒன்றில் திரும்பிக் கொண்டிருந்தனர். அச்சமயம் வழியில் மோட்டார் சைக்கிளில் காத்திருந்த கொலையாளிகள் ஆட்டோவை வழிமறித்து நிறுத்தி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். ஆபத்தான கட்டத்தை இவர்கள் கடந்து விட்டனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கூறியுள்ளன.

விடுதலைப் புலிகள் மீதான இந்த தாக்குதலை செய்தவர்கள் இலங்கை இராணுவத்தின் ஆதரவுடனேயே செய்துள்ளனர் என்று புலிகள் மிக கடுமையாக கூறியுள்ளனர்.

## ‘குட்மோனிங் அமெரிக்கா’ நிகழ்ச்சிக்காக எங்கள் கல்முனைக் குழந்தை



சுனாமி அலை வந்து போன ஒரு மணி நேரத்தில், கடற்கரையில் இருந்த இறந்து போன உடல்களுக்கு மத்தியில் கிடந்தது தான் இந்தக் குழந்தை ‘பேபி 81’. பிறந்து நான்கு மாதங்களேயான ஆண் குழந்தை. அன்று 81 ஆவது ஆளாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதால் ‘பேபி 81’ என்று பெயர் வைக்கப்பட்டது.

இந்தக் குழந்தை தமது என்று ஒன்பது தாய்மார் உரிமை கோரியதை அறிந்திருப்பீர்கள். உத்தியோக பூர்மவமாக இது தனது குழந்தை என்று ஜெனிதா ஜெயராஜ் உரிமை கோரி நீதிமன்றம் ஏறினார்.

பல சிக்கல்களுக்கு மத்தியில், DNA பரிசோதனையின் பின் இந்தக் குழந்தை ஜெயராஜா அபிலாஸ் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. உலகம் முழுவதுமே இந்த வழக்கை அவதானித்து வந்தது. உலகம் முழுதுமான பத்திரிகைகள், தொலைக்காட்சியில் இந்தக் குழந்தையின் (Baby 81) பெயர் வந்தது.

இப்போ, அமெரிக்க தொலைக்காட்சி நிறுவனம் ABC யின் மிகப் பிரபல்யமான ‘குட்மோனிங் அமெரிக்கா’ நிகழ்சிக்கு வருமாறு இந்தக் குழந்தைக்கும், பெற்றோருக்கும் அழைப்பு விடப்பட்டுள்ளது.


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# சமையலறை காற்றகற்றி



சமைக்கும் போது வெளிவரும் மணம், அதீத ஈரம் (Excess Moisture), எண்ணெய் போன்றவற்றை வீட்டினுள் பரவாது சமையலறையிலிருந்து நேரடியாக வீட்டிற்கு வெளியே அனுப்புவதற்கு சமையலறை காற்றகற்றிகள் (Exhaust Fans) பயன்படுத்தப்படுகின்றன.

வீடுகளை புதிதாக நிர்மாணிக்கும்போது நிமிடத்திற்கு சுமார் 200 கனஅடி காற்றை வெளியகற்றக்கூடிய காற்றகற்றிகள் பொருத்தப் படுகின்றன. சமையலறை காற்றகற்றிகளின் காற்றகற்றும் வலுவானது காற்றகற்றும் குழாய் (Vent) களின் வகை, அளவுகள் (விட்டம், நீளம்), வளைவுகள், வாயில் பலகணி (Vent Hood Louvers) மற்றும் காற்றகற்றியிலுள்ள வடிகட்டி (Filter) போன்றவற்றில் தங்கியுள்ளது. சமையலறை காற்றகற்றிகளின் காற்றகற்றும் குழாய்களாக சரியான விட்டமுடைய உலோகத்தினாலான குழாய்களையே பயன்படுத்தி முடிந்தளவு நீளம் குறைவாகவும் வளைவுகளற்றதாகவும் அமைப்பது காற்ற கற்றிகள் போதியளவு காற்றை வெளியகற்ற உறுதுணையாக அமையும். அத்துடன் குழாய்களை திருகாணி கொண்டு சரியான முறையில் பூட்டுவதோடு, குழாய்கள் பொருந்தும் இடங்களில் அதற்கென பாவிக்கப்படும் நாடாக்களால் (Foil Tape) இறுக்கமாக சுற்றவும் வேண்டும்.

சமையலறை காற்றகற்றிகள் சமையலடுப்பின் அகலமாகவாவது இருக்க வேண்டும். அத்துடன் அடுப்பிலிருந்து 30 அங்குலத்திற்கு கூடாத உயரத்தில் பூட்டப்படவேண்டும். 17 அங்குல காற்றகற்றிகளை விட 20 அங்குல காற்றகற்றிகள் அடுப்பின் முன்புறத்திலிருந்து காற்றை நன்கு அகற்றக்கூடியவை. அழகுக்காக அமைக்கப்பட்ட சில காற்றகற்றிகள் மற்றும் நுண்அலை வெதுப்பக அடுப்புகளுடன் (Microwave Oven) கூடிய காற்றகற்றிகளால் மிகவும் நன்றாக அடுப்பின் எல்லா பகுதிகளிலிருந்து காற்றை வெளியகற்றுவது கடினம். இத்தகையை காற்றகற்றிகளால் அடுப்பிலிருந்து 15 அங்குல உயரத்தில் இருந்தால் கூட அடுப்பின் அனைத்து பகுதிகளிலிருந்தும் காற்றை சரியாக வெளியகற்ற முடிவதில்லை.

நகர்புறவாசிகள் தற்போது குறைந்த மின்சக்தி மற்றும் குறைந்தளவு நீரை உபயோகிக்கும் வீட்டுப்பாவனை உபகரணங்களை விரும்பும் அதேவேளை சமையலறையில் பெரிய குளிர்சாதனப்பெட்டியையும் பெரிய காற்ற கற்றியையும் விரும்புகிறார்கள். அநேகமான பெரிய சமையலறை காற்றகற்றிகள் நிமிடத்திற்கு 600 கனஅடிக்கு மேல்காற்றை வெளியகற்ற கூடியவை.

ஒரு வீட்டிலிருந்து எவ்வளவு காற்று வெளியேற்றுகின்தோ அதேயளவு காற்று உள்ளே வரவேண்டும் என்பது சாதாரண பௌதீகவிதியாகும்.

பெரும்பாலான வீட்டு உரிமையாளர்களுக்கு பெரிய காற்றகற்றிகள் வீட்டினுள் அமுக்க குறைவை ஏற்படுத்தி குளிர்காயும் அடுப்பு (fire place) எரிபொருட்களினால் இயங்கும் சூளை (Furnace) வெந்நீர் அடுப்பு (water Heater) போன்றவற்றிலிருந்து வெளியேறும் எரிபொருட்கள் எரிவதால் உருவாகும் விளைவுப்பொருட்களை வீட்டுக்குள் இழுத்து விடுவது (Back Drafting) தெரியாது. இது வீட்டில் வசிப்பவர்கட்கு ஆபத்தை விளைவிக்கலாம்.

இரண்டு தளங்களை (2 story) கொண்ட 1600 சதுரஅடி வீட்டில் ஒவ்வொரு தளமும் 800 சதுரஅடியாக இருக்கும். ஒவ்வொரு தளமும் 8 அடி உயரமாக இருப்பின் நிலத்தின் கீழ் பகுதியையும் சேர்த்து வீட்டின் கனவளவு 19,200 கனஅடி (800 x 8 x 3) ஆகும். நிமிடத்திற்கு 700 கனஅடியை வெளியகற்றும் காற்றகற்றியினால் 28 நிமிடத்திற்குள் (700 x 28 = 19,600) வீட்டின் கனவளவு காற்றை அது வெளியகற்றிவிடும்.

இப்பெரிய காற்றகற்றிகள் வீட்டினுள்ளிருந்து பெருமளவு காற்றை வெளியகற்றுவதால் எரிவாயு (Natural Gas) மற்றும் மின்சக்தி செலவு பெருமளவில் அதிகரிக்கின்றன.

அடுப்பிலிருந்து காற்றை இழுத்து வடிகட்டி மீண்டும் வீட்டுக்குள் விடும் காற்றகற்றிகளால் பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. அதேவேளை இத்தகைய காற்றகற்றிகளினால் திருப்திகரமாக சமையலறையிலிருந்து மணத்தையோ அல்லது எண்ணெய், அதீத ஈரம் போன்றவற்றையோ அகற்ற முடிவதில்லை.

சமையலறைக்கு பெரிய காற்றகற்றிகளை பொருத்தியவுடன் அது இயங்கும்போது வீட்டில் உள்ள எரிபொருட்களில் இயங்கும் உபகரணங் களின் எரிந்த வாயுக்களை வெளியே அகற்றும் குழாய்களிலிருந்து அவ்வாயுக்கள் வீட்டுக்குள் வருகிறதா என பரிசோதிக்க வேண்டும். இதனை இலகுவாக ஒரு புகைத்தடியை (Smoke Stick) எல்லா எரிந்த வாயுக்களை வெளியகற்றும் குழாய்களில் ஆரம்பத்தில் வைப்பதன்மூலம் அறியலாம். வீட்டிற்குள் இருக்கும் எல்லா காற்றகற்றிகளும் (சமையலறை காற்றகற்றி, குளியலறை காற்றகற்றி உடுப்புலர்த்தி - Dryer, துப்புரவாக்கும் உள்வாங்கி - Central Vacum) இயங்கும் போது புகைத்தடியின் புகை வீட்டிற்குள் வந்தால் வீட்டுக்குள் எரிந்த வாயுக்கள் இழுத்து வரப்படுவது உறுதியாகும்.

இப்பரிசோதனையின்போது ஒரு யன்னலை, புகைத்தடியின் புகை வீட்டுக்குள் வராது எரிந்த வாயுக்களை வெளியகற்றும் குழாயினூடாக செல்ல ஆரம்பிக்கும் வரை, மெதுவாக திறப்பதன் மூலம், வீட்டுக்குள் காற்று சமநிலையை பேண எவ்வளவு காற்று வெளியிலிருந்து உள்ளே வரவேண்டும் என அறிந்து கொள்ளலாம். திறக்கப்பட்ட யன்னலின் துவாரப்பகுதி 10 முதல் 20 சதுர அங்குலம் வரையில் இருப்பின் ஒரு தானியங்கி தடை (Automatic Damper) உடன் கூடிய குழாய் மூலம் வீட்டுக்குள் காற்று சமநிலையை பேண, வெளியிலிருந்து காற்றினை கொண்டு வரமுடியும்.

கனடாவில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான வழிகாட்டியில், காற்றகற்றிகளால் ஏற்படும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய வெளியிலிருந்து வீட்டுக்குள் காற்றை கொண்டு வரத் தேவையான குழாயின் அளவை பட்டியலிட்டுள்ளது. இப்பட்டியலின்படி நிமிடத் திற்கு 200 கனஅடி காற்றகற்றிக்கு 10 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம், 300 கனஅடி காற்றகற்றிக்கு 12 அங்குல விட்டமுள்ள குழாய்மூலமும் வெளியிலிருந்து வீட்டுக்குள் காற்றை கொண்டு வரவேண்டும்.

மேற்கூறிய பரிசோதனையில் திறக்கப்படும் யன்னலின் அளவு 20 சதுர அங்குலத்திற்கு மேலிருந்தால் வெளியிலிருந்து காற்றை உள்ளே கொண்டு வருவதற்கு அதற்கான உபகரணங்கள் (Makeup Air Ventilators) மூலம் வசதி செய்யப்படவேண்டும்.

எரிபொருட்களில் இயங்கும் உபகரணங்களின் எரிந்த வாயுக்களை காற்றகற்றிகள் வீட்டிற்குள் இழுத்து விடாதவாறு வீடுகள் வடிவமைக்கப்பட வேண்டுமென கனடிய கட்டிட நிர்மாண விதிமுறைகள் தெரிவிக்கின்றன.

பல வீடுகளில் சமையலறை காற்றகற்றிகளை இயக்கியவுடன் எரிந்த வாயுக்கள் வீட்டுக்குள் இழுத்து வரப்படுவதை அவதானித்துள்ளேன். எரிந்த வாயுக்கள் வீட்டுக்குள் வருவதால் உயிராபத்தை விளைவிக்கும் காபனோ ரொட்சைட் (CO) மற்றும் குளிர்காயும் அடுப்புகளிலிருந்து வெளியேறும் புற்றுநோயை உருவாக்கக் கூடிய பென்சீன் போன்றவற்றால் வீட்டில் வசிப்பவர்கட்கு ஆபத்துக்கள் ஏற்படலாம்.

வீட்டினுள் விறகை எரித்து குளிர்காய்பவர்கள் ஒருபோதும் சமையலறையில் பெரிய காற்றகற்றிகளை பொருத்தக் கூடாது. சில வீடுகளில் வெளியிலிருந்து வீட்டுக்குள் காற்றுவரும் குழாய்களை "குளிர்" வருகிற தென்று துணிகளால் மூடி வைத்திருப்பதையும் கண்டிருக்கிறேன்.

சமையலறை காற்றகற்றிகள் வீட்டிலிருப்பவர் களையும் வீட்டையும் பாதிக்காதவாறு சரியாக வடிவமைக்கப்பட்டு பொருத்தப்படுவது மிகவும் முக்கியமானதும் அவசியமானதுமாகும்.

மூலம்: Kitchen Fans & Depressurization Hazards
- நல்லையா தயாபரன்

தமிழில்: சிவ ஞானநாயகன்

# சுரேஸ் ஜோக்கிமின் புதிய கின்னஸ் சாதனை



சுரேஸ் ஜோக்கிம் தனது 29வது கின்னஸ் சாதனையை மிசுசாக்காவில் கடந்த வாரம் நிலைநாட்டி உள்ளார். நூறு மணித்தியாலம் தொடர்ந்து நடனமாடுகின்ற சாதனையைப் புரிந்து சுரேஸ் மறுபடியும் கின்னஸ் புத்தகத்தில் மட்டுமல்ல ஊடகங்களிலும் இடம் பிடித்துள்ளார்.

இந்த சாதனை முன் எப்போதும் எவரினாலும் செய்யப்படாத புதிய சாதனை ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து உலக சாதனை செய்து வரும் சுரேஸ் ஜோக்கிம் தொடர்ந்தும் பல திட்டங்களை தான் வைத்திருப்பதாக கூறுகின்றார்.

தனது அடுத்த சாதனையானது தொடர்ந்து 62 நாடுகளில் 35 கிலோ மீற்றர் ஓடி முடிப்பது என்று இவர் கூறுகின்றார். இதற்கு சுமார் 188 நாட்கள் ஆவது எடுக்கும். இந்த சாதனையை இவர் இந்த வருடம் டிசம்பர் மாதம் 25 திகதி ஆரம்பிக்க இருப்பதாக தெரிகின்றது.

தனது சாதனைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவு தரும் விளம்பரம் பத்திரிகையின் வாசகர்களுக்கு நன்றியையும், வாழ்த்துகளையும் சுரேஸ் ஜோக்கிம், மற்றும் அவருடைய முகாமையாளர் கிருஸ்ணா தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்தும் பல புதிய சாதனைகளை இவர் செய்ய வேண்டும் என்று விளம்பரம் வாசகர் சார்பாக நாமும் வாழ்த்துகின்றோம்.


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# தாயிடம் நட்டஈடு கோரி வழக்குத் தொடரவேண்டி ஏற்படலாம்?

**நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 5**



கருத்தரிக்கின்ற போது நிகழும் ஓர் அனர்த்தம் பற்றி கடந்த இதழில் பார்த்தோம்.

கருத்தரிக்கின்ற போது நிகழ்கின்ற இன்னுமோர் அனர்த்தம் பற்றிய விபரங்களை தாய்மை அடைய விரும்புகின்ற பெண்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

கருத்தரித்த பெண்கள் அற்ககோல் அருந்துவதால் கர்ப்பத்தில் இருக்கின்ற சிசு மிக மோசமான பாதிப்புக்குள்ளாகின்றது என்பதை அனேகமான பெண்கள் அறிந்திருப்பதில்லை. இவ்விதம் கர்ப்பிணிப் பெண்கள் அற்ககோல் அருந்தி சிசுவுக்கு ஏற்படுகின்ற பாதிப்பு Fetal Alcohol Syndrome (FAS) என்று அழைக்கப்படுகின்றது.

தாம் கருத்தரித்திருக்கின்ற போது எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமான அளவு அற்ககோலை தாய்மார்கள் அருந்துகின்றார்களோ, அந்தளவுக்கு அதிகமாகக் கர்ப்பபையில் உள்ள குழந்தைகள் உடல் ரீதியாகவும், மனஇயல் ரீதியாகவும் பெரும் பாதிப்புக்குள் உள்ளாகின்றன.

மூளை வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. இந்தக் குழந்தைகள் வயதுக்கு வந்ததின் பின்னரும் தமது வயதுக்குரிய நடத்தைகள் எதுவும் இன்றி சிறு குழந்தைகள் போல நடந்து கொள்ளுகின்றன. உடல் உறுப்புகளின் செயல் பாட்டில் குறைபாடு நிகழ்ந்திருக்கும். உடல் அவயவங்கள் முழுமையாக வளர்ச்சியடையாமல் குறைபாடுடன் இருக்கலாம். வளர்ச்சி குன்றிய விரல்கள், கைகள், கால்கள் என்று இவர்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்.

கற்பது என்பது இவர்களுக்கு சிக்கலான ஒரு விடயமாக இருக்கும். இவர்களுக்கு ஞாபக சக்தி வெகு வெகு குறைவாக இருக்கும். எத்தனை தரம் ஒன்றைச் சொன்னாலும் மண்டையில் ஏறாது. இதயத்திலும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

கனடாவில் பிறக்கின்ற குழந்தைகளில் ஆயிரத்திற்கு 1-3 குழந்தைகள் இவ்விதமான Fetal Alcohol Sprectrum Disorder (FASD) க்கு உள்ளாகின்றனர். இதன் பாதிப்பினை இவர்கள் தமது வாழ்நாள் முழுவதுக்கும் அனுபவிக்க வேண்டி இருக்கும்.

இவ்விதமான Fetal Alcohol Sprectrum Disorder (FASD) பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் தமது பின் நாட்களில் வேறு பல சிக்கலான நிகழ்வுகளுடன் தொடர்பாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு தொடர்ந்து செல்லாமல் பாடசாலையை விட்டு முன் கூட்டியே வெளியேறி விடுவது, அற்ககோல் மற்றும் போதைப் பொருட்களின் பழக்க வழக்கத்திற்கு உள்ளாவது, வீட்டை விட்டு வெளியேறி மறுபடியும் வீட்டுக்குத் திரும்பாமல், தெருக்களில் வசிக்கத் தொடங்குவது (Homeless People ஆவது), சட்டத்தைப் பற்றி எந்த பிரக்ஞையும் இன்றி அதற்கு முரணான வழிகளில் செயல்படுவது என்று பல குளறுபடிகளான நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடுவது அறியப்பட்டுள்ளது.

இவ்வளவுக்கும் காரணம் இவர்கள் கர்ப்பப்பையில் சிசுவாக இருக்கின்றபோது, இவர்களுடைய தாய் மது அருந்தியதே காரணம்.

எதிர்காலத்தில் இத்தகை பாதிப்புக்குள்ளாகிய குழந்தைகள், வளர்ந்த பின், தமது தாயிடம் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரக் கூடிய வகையில் சட்டங்கள் வந்தால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

அற்ககோல் மட்டுமல்ல கர்ப்பிணிப் பெண்கள் புகைப்பதினாலும் கர்ப்பத்தில் உள்ள சிசு மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்றது. தாய்மை அடைந்த தாய்மார்கள் இந்த அற்ககோல் மற்றும் புகைத்தல் தொடர்பாக மட்டுமா கவனமாக இருக்கவேண்டும். இல்லை. இன்னும் பல விடயங்களில் இவர்கள் அதிக அக்கறையோடு இருக்க வேண்டும். தாம் உண்ணுகின்ற உணவு தொடர்பாகவும் இவர்கள் மிக கவனமாக இருப்பது மிக அவசியம். தாய்மை அடைந்த தாய்மார் தமக்கு வழமையாகத் தேவைப்படுகின்ற புரத உணவிலும் பார்க்க மேலதிக புரத உணவை உள்ளெடுக்க வேண்டும்.

ஓர் ஆரோக்கியமான, பூரண வளர்ச்சியடைந்த சிசுவில் 925 கிராம் புரதம் இருக்கும். இந்த சிசு அண்ணளவாக 280 நாட்கள் கர்ப்பப்பையில் தங்கியிருக்கும். ஆகவே நாள் ஒன்றுக்கு 3.3 கிராம் தேவைப்படும் என்று ஒரு கணக்கு சொல்லலாம். ஆனால் உண்மை அப்படி அல்ல.

கருத்தரித்த முதல் மாதம் தாய் மேலதிகமாக .6 கிராம் புரதத்தை மேலதிகமாக உள்ளெடுத்தால் போதுமானது. அதே நேரம் இந்த தாய் கருத்தரித்து முப்பதாவது வாரம் 6.1 கிராம் புரதத்தை மேலதிகமாக உள்ளெடுக்க வேண்டும்.

கருத்தரித்த தாயின் வயது, நிறை என்பனவற்றைக் கருத்திற் கொண்டு, அந்தத் தாய் எவ்வளவு புரதத்தை உள்ளெடுக்க வேண்டும் என்பதை ஒரு சத்துணவியல் நிபுணரே தீர்மானிக்க முடியும். எனவே கர்ப்பிணித் தாய்மார்களே, உங்கள் குடும்ப வைத்தியரின் உதவியுடன் நீங்கள் ஒரு சத்துணவியல்

**செழியன்**

நிபுணரை சந்திப்பது மிக முக்கியமானது.

நம்மவர்களுக்கு ஒரு வழக்கம் உள்ளது. உண்மையில் இது நம்மவர்களுக்கு மட்டுமே உரிய வழக்கம் மட்டும் அல்ல. தாய்மை அடைந்த தாய் இரண்டு உயிரை சுமக்கின்றாள் எனவே அவள் இரண்டு மடங்காக சாப்பிட வேண்டும் என்பது தான் இந்த தவறான அபிப்பிராயம். உலகம் முழுவதும் இத்தகைய ஒரு எண்ணம் உள்ளது.

உண்மை என்ன?

தாய்மை அடைந்த தாய் 140 இறாத்தல் என்று வைத்துக் கொண்டால் அவருடைய வயிற்றில் வளரும் குழந்தை சராசரியாக ஏழு இறாத்தல் நிறையுடையதாக இருக்கும்.

எனவே இந்த தாய் மேலதிகமாக சாப்பிட வேண்டியது தனது மேலதிக ஏழு இறாத்தல் நிறைக்கு மட்டுமே.

தாய்மை அடைந்த பெண்கள் அளவுக்கு அதிகமான புரதத்தை உள்ளெடுக்கின்ற போதும், அளவுக்கு குறைவான அளவு புரதத்தை உள்ளெடுக்கின்ற போதும் கர்ப்பத்தில் உள்ள சிசு பாதிப்புக்கு உள்ளாகின்றது.

இது மட்டுமா?

இல்லை இன்னும் நிறைய இருக்கின்றது.

# தொழிலாளர் காங்கிரசால் சந்திரிகா அரசுக்கு அரசியல் நெருக்கடி

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சந்திரிகா அரசுக்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொண்டுள்ளதால் பெரும்பான்மை இழந்த சந்திரிகா அரசு நெருக்கடி நிலையில் உள்ளது.

எட்டு எம்.பிகளைக் கொண்ட இ.தொ.கா தனது ஆதரவை விலக்கிக் கொள்வதற்கு மூன்று காரணங்களை முன்வைத்துள்ளது.

தங்களை கலந்து ஆலோசிக்காமல் அரசு முடிவெடுக்கிறது என்பது காங்கிரசின் ஒரு குற்றச்சாட்டு. கொத்மலை நீர் மின்சார திட்டத்தை தமது கடுமையான ஆட்சேபனையையும் மீறி அரசு செயல்படுத்த முனைகிறது என்பது இரண்டாவது குற்றச்சாட்டு. இதனால் மலையக மக்கள் பாதிப்படைவார்கள் என்பது இ.தொ.கா.வின் நிலைப்பாடு.

அதேசமயம் சிங்களப் பொலிசாரின் அடக்குமுறைக்கு மலையகத் தொழிலாளர்கள் அடிக்கடி பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இத்தகைய ஒரு சூழ்நிலையில் அரசில் தொடர்ந்து இருப்பதில் அர்த்தம் எதுவும் இல்லை என காங்கிரஸ் கூறுகின்றது.

இந்த விலகலுக்கு இது மட்டும் காரணம் இல்லை என்றும் வேறு செய்திகள் தெரிவிக்கின்றன. ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்காமல் சந்திரிகா இழுத்தடித்தது, மலையகத்தில் இருந்து ஆசிரியர் பதவிக்கு 3500 பேர், பொலிஸ் சேவைக்கு 1000 பேர், அரசு அலுவலகங்களுக்கு 2500 பேருமாக மலையக இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்படும் என அளிக்கப்பட்ட உத்தரவாதம் நிறைவேற்றப் படாததும் காரணங்கள் என்று தெரிகின்றது.




# மற்றுமோர் ஆங்கில இலவச பத்திரிகை (Dose)

ரொறொன்ரோ மாநகரில் தற்போது Metro என்றும் 24 Hours என்றும் இரண்டு இலவச ஆங்கிலப் பத்திரிகைகள் தினமும் வெளிவருவது உங்களுக்கு தெரியும்.

எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 4ஆம் திகதி முதல் புதிய Dose எனப்படும் இன்னொரு இலவச ஆங்கிலப் பத்திரிகை தினமும் வெளிவரவுள்ளது. Can West Global Communications Corp. என்றும் நிறுவனம் கனடாவிலுள்ள ரொறொன்ரோ உட்பட ஐந்து முக்கிய நகரங்களில் இந்த இலவசப் பத்திரிகையை வெளியிடவுள்ளது. விளம்பரங்களை மட்டும் நம்பிவெளிவரும் இப்பத்திரிகை முதலில் மார்ச் 03, 2005 இல் வெளிவர இருந்தது. ஆனால் விளம்பரங்களை சேர்ப்பதற்கு மேலும் அவகாசம் கொடுப்பதற்காக தனது வெளியீட்டை ஏப்ரல் 04, 2005 இற்கு பின்போட்டுள்ளது.

**ரொறொன்ரோ நகரில் விநியோகிக்கப்படும் ஆங்கில இலவச பத்திரிகைகளின் பிரதிகளின் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| Metro | - (Toronto star இனுடையது) - | 230,000 |
| 24 hours | - (Quebecor இனுடையது) - | 225,000 |
| Dose | - (National post இனுடையது)- | 120,000 |

வினிப்பெக்கை தலைமையகமாகக் கொண்ட இந்த Can West Global Communications Corp. யை சேர்ந்த Noah Godfrey என்பவர் இந்த பத்திரிகையின் பிரசுரிப்பாளர் ஆக இருக்கிறார். இவருடைய தகப்பனார் Paul Godfrey, ரொறொன்ரோ Blue Jays இன் தலைவராக இருப்பவர். இவரும் Can West Global Communication Corp. இன் நிர்வாக அங்கத்தவராக இருக்கிறார். Dose பத்திரிகை 18வயது தொடக்கம் 34 வயதுவரை உள்ளவர்களை தனது வாசகர்களாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் வெளிவர இருக்கிறது. இவ்வயது வாசகர்களை திருப்திப்படுத்த தற்போது ஒரு பத்திரிகையும் இல்லை என்கிறது இந்த நிறுவனம்.

இவ் இலவசப் பத்திரிகை ரொறொன்ரோ, ஒட்டாவா, எட்மென்ரன், கல்கரி மற்றும் வன்கூவர் ஆகிய ஐந்து நகரங்களிலும் வர உள்ளது. ரொறொன்ரோவில் 120,000 பத்திரிகையின் பிரதிகளையும் வன்கூவரில் 80,000 உம் மற்றைய மூன்று நகரங்களில் ஒவ்வோர் நகரத்திலும் 40,000 பிரதிகளை வெளியிட இந்நிறுவனம் தீர்மானித்துள்ளது.

Metro அல்லது 24 hours போல் அல்லாது தங்களது பத்திரிகை வித்தியாசமாக இருக்கும் என்று கூறும் இந்த நிறுவனம் தங்கள் பத்திரிகையில் தினமும் புதினங்கள் ஒரே பார்வையில் (At a glance) இலகுவில் வாசிக்க கூடியதாக இருக்கும் என்று கூறுகிறது.

இந்த 24 பக்கங்களை கொண்ட பத்திரிகை ரொறொன்ரோ முழுவதும் பரவலாக வைத்திருக்கப்பட்டுள்ள 1000 பத்திரிகை பெட்டிகள் மூலம் விநியோகிக்கப்படும். இப்பத்திரிகையில் ஒரு முழுப்பக்க கறுப்பு வெள்ளை விளம்பரம் ஒன்று ஒருதரம் வெளிவர $11,429.00 டொலர் அறவிடப்படும். இந்த விளம்பரம் வண்ண நிறங்களில் வரவேண்டும் எனில் மேலதிகமாக $4,600.00 டொலர் அறவிடப்படும். இவ் ஒரு முழுப்பக்க விளம்பரங்களை பல நாட்களுக்கு தொடர்ந்து வெளியிட விரும்புவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். இவ்வாறு பல நாட்களுக்கு முழுப்பக்க விளம்பரம் வாங்கும் நிறுவனம் ஒன்றிற்கு ஒரு நாளைக்கு கறுப்பு வெள்ளை விளம்பரம் என்றால் $8,000 டொலரும் வண்ண நிறங்களில் என்றால் மேலதிகமாக $2,500 டொலரும் அறவிடப்படும்.

இதே நிறுவனத்தால் விற்பனைக்கு வெளியிடப்படும் National Post பத்திரிகையின் விற்பனை இந்த இலவச பத்திரிகையால் பாதிக்கப்படமாட்டாது என இந்த நிறுவனம் கூறுகின்றது. இவ் இலவச பத்திரிகை இளையவர்களையே வாசகர்களாக கொண்டதாக இருக்கப் போவதால் National Post இன் விற்பனை குறைய சாத்தியம் இல்லை. இளையவர்களை கவரும் புதிய ஆடை அலங்காரங்கள் (fashion), வீடியோ



விளையாட்டுக்கள் (video games), விளையாட்டுகள் (sports) மற்றும் Dating தகவல்கள் போன்றவற்றை இப்பத்திரிகை கொண்டிருக்கும். இவற்றைவிட அன்றைய தினம் திரையிடப்படும் சினிமா படங்களின் விபரங்கள் கைத்தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளக்கூடிய இணையவலை அமைப்புக்களின் விவரங்கள் என்பனவும் இப்பத்திரிகையில் இருக்கும்.

CIBC வங்கியின் உலக வியாபார அறிக்கை இவ்வருடம் விளம்பரத்திற்காக நிறுவனங்கள் வழமையாக செலவு செய்கின்ற பணத்தை விட 4% அதிகம் செலவு செய்யும் என்று கூறுகிறது. இதனால் Dose இற்கு விளம்பரம் சேகரிப்பதில் அதிக சிரமம் இருக்காது.

Metro இலவசபத்திரிகையை Toronto Star பத்திரிகையும் ஒரு சுவீடனைச் சேர்ந்த Metro International SA என்ற நிறுவனமும் சேர்ந்தே வெளியிடுகின்றார்கள். 2000ஆம் ஆண்டில் இருந்து வரும் Metro இற்கு சுமார் 376,300 வாசகர்கள் இருப்பதாக ஒரு கணிப்பீடு கூறுகிறது.

Quebecor Inc's இன் வெளியீடான 24 hours என்ற இலவச பத்திரிகை 2003 ஆண்டில் இருந்து வெளிவருகின்றது. 24 hours சுமார் 259,100 வாசகர்களை கொண்டிருப்பதாக அதே கணிப்பீடு கூறுகிறது.

Dose இன் விளம்பரதாரர் ஒருவர் இக்காலத்து இளைஞர்களிடம் வாசிப்பு பழக்கம் அருகி வருவதால் இப்பத்திரிகை விநியோகம் எவ்வாறு இருக்குமோ தெரியாது என்கிறார்.

நன்றி - Toronto Star
தமிழில் - சிவ ஞானநாயகன்

# கவலைகள்

துன்பத்தை உணர்ந்துகொண்டு இருப்பதனால் இன்பம் மகிழ்ச்சியைத் தருகின்றது. குளிர்காலம் இருப்பதனால்தான் காலம் வசீகரமானதாக இருக்கிறது. மனதிலே எழும் பல இன்ப துன்ப உணர்வுகள் நேற்று நடந்து முடிந்த விஷயங்களை அல்லது நாளை நடக்கும் விஷயங்களைப்பற்றித்தான் ஓடுகின்றன. கவலையால் எண்ணங்கள் முடக்கப்படுகின்றன. வேலையைவிட கவலைதான் பெரும்பாலானோரைக் கொல்லும். இதற்கு காரணம், அநேகர் தன் வேலைகளில் கவனம் செலுத்துவதைவிட அதிகளவில் கவலைப்படுவது. கவலைப்படுவதால் எந்த ஒரு பிரச்சினையும் தீர்க்க முடியாது. பிரச்சினை வரும்போது கவலையை விட்டு அதை உடனடியாக ஒரு முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

செயலுக்கான திட்டங்கள் தயாராகும்போது மனதில் ஒரு துடிப்பும் வேகமும் எழுகிறது. கவலைப்படுவதை அன்பு செலுத்துவதற்குச் சமன பலர் நினைக்கிறார்கள். நீ வரவில்லையே என கவலைப்பட்டேன், நீ சோதனையில் சித்தியடையவில்லையே எனக் கவலைப்பட்டேன். வாழ்வு பூராகவும் கல்யாணம் ஆகாமல் நிற்பாயோ பெண்ணே! என்று கவலைப்பட்டேன் என்று பலவாறாகக் கவலைப்படுகிறோம். இது அவருக்கு ஒரு வலுவோ இல்லை ஒரு நம்பிக்கையோ தாரது. பயனில்லாத செயல். நாம் அன்பு காட்டிக்கொள்ள எத்தனையோ வழிகள் உள. எழுதும் விதி விரல் தான் எழுதிக் கொண்டே நகரும். அழுது புலம்பி நின்றாலும் அரற்றி பதறி புரண்டாலும் அரைவரிகூட அழியாது என்கிறார் ஒரு தத்துவ ஞானி. நமக்கு முன் வாழ்ந்தவர் கவலைப்பட்டார் என்ன ஆயிற்று. அவர்களை மயானத்திற்கு அனுப்பிவிட உலகம் ஓடிக்கொண்டு இருக்கிறது. நாளை நம்மையும் மயானத்திற்கு அனுப்பிவிட்டு உலகம் ஓடிக்கொண்டு இருக்கும். எனவே இருக்கும் நாளை சிரித்து மகிழ்ந்து பிறருக்கு உதவி செய்துவாழ வேண்டாமா? அழுது பயந்தா, கவலைப்பட்டா வாழ்வது? எம்கையில் உள்ள விஷயங்கள் பற்றின கவலை என்றால் பரிகாரத்தைக் காண நாம் முயலவேண்டும். கவலையின் காரணங்களுள் அதைப்பற்றிய ஆய்வும் போக்க திட்ட மிடலும் பின் அதைச் செயல்படுத்தலும் தானே நீக்கும் வழிதுறைகளில் சிலவாகும்.

எமது கட்டுப்பாட்டில் இல்லாத விஷயத்தைப் பற்றி கவலைப்படுவது அறியாமை, என்ன மழைவராமல் பயிர் எரிந்து போமோ என புயல் வருமோவென வெள்ளம் வருமோ தீ பிடித்தால் என் செய்வது இப்படி எத்தனை எத்தனையோ கவலைகள். ஆனால் ஏதொன்றும் செய்ய முடியாது, கவலைப்பட்டும் பயன் இல்லை. இதை நினைவில் கொள்ள வேண்டும். யாரொருவர் வேலை போய்விடுமோ அன்றி, பரீட்சையில் தவறிவிடுவேனோ என்று கவலைப்பட்டால் அதுவே நிகழும், என்பது தான் உண்மை. மனம் எதை நினைக்கிறதோ அதை நிறைவேற்றுகிறது. நடக்க வேண்டிய நல்ல காரியங்களை மனதில் எண்ணி, அதனை அடைய என்ன திட்டம் தீட்டலாம் என்று அதை விடுத்து கவலைகள் அழகாக பட்டியல் போட்டால், என் பெண்குழந்தை கல்லூரி போய் வருகிறாளே அங்கே ஏதாவது நடந்துவிடுமோ. மனைவியை தனியேவிட்டு விட்டு வேலைத்தலத்திற்கு வந்துவிட்டேனே, பிறருக்கும் குழந்தை கூன், குருடு செவிடாகப் போனால் நான் இவ்வளவு ஒல்லியாக இருக்கிறேனே பிறர் என்ன நினைப்பார்கள், வயதாகிவிட்டதே தலை நரைத்து வழுக்கை விழுந்து வருகிறதே கவலைக்குப் பதில் மேற்சொன்ன ஒவ்வொன்றிற்கும் சரியான பதிலை பரிகாரத்தைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஆக்கம் - கந்தையா சண்முகம்
இளைப்பாறிய அதிபர் - 416-412-3570

வாழ்க்கையில் பிரச்சினைகள் கவலைகள் எப்படி தோன்றுகின்றன என்று முதலில் யோசித்துப் பார்க்க வேண்டும். வாழ்க்கையை சரிவர விளங்கிக் கொள்ளாத போதே பிரச்சினைகளும் கவலைகளும் தோன்றுகின்றன. வாழ்க்கையில் ஏற்படுகின்ற ஒரு நிகழ்ச்சியை பிரச்சினையாகவோ கவலையாகவோ கருதலாம். அன்றி பிரச்சினையோ கவலையோ இல்லை என்றும் கருதலாம். இது முற்றிலும் மனோபாவத்தைப் பொறுத்த விஷயம். ஒரு மனிதன் தன் கவலைகளை எண்ணி தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்று ஒரு ஆற்றின் பாலத்தின் மீது நின்று ஆற்றில் குதித்து உயிர்விட தயாரானான். அந்த வழியே வந்த வழிப்போக்கன் அவனை இடைமறித்து ஏன் ஆற்றில் குதிக்கிறாய் என்று கேட்டான். அவன் தன் பிரச்சினைகளை கவலைகளை எல்லாம் கூறிய போது வழிபோக்கன் கூறினான், என்னுடைய கவலைகள் இதைவிட பத்துமடங்கு அதிகம். ஆக நான் தான் முதலில் தற்கொலை செய்து கொள்ள வேண்டும். நீ இந்தப் பக்கம் வா, நான் முதலில் குதிக்கிறேன் என்று ஆற்றில் குதித்தான். அவன்

தொடர்ச்சி 18ம் பக்கம்


வீட்டில் - முதலீடு வீண்விரயமாவதில்லை....
வீட்டில் - முதலீடே எம் வாழ்க்கைக்கு மூலதனம்!
பாதுகாப்பாக உங்கள் பணத்தை வீட்டில் முதலிட்டு
வாழ்க்கையில் வெற்றிபெற அழையுங்கள் பரம். ஜி
பாடுபட்டு உழைத்த பணத்தை வீடுகளில்
முதலிடும் வழிகளை அறிய நாடுங்கள்
Param Gnana
Sales Representative
HomeLife GTA
Realty Inc.
www. themathuram.com
Cell: 416 230 1107 Bus: 416 321 6969
Res: 905 670 9969 (Mississauga)
themathuram.com

# “ஓ” போடு சானியா மிர்சாவிற்கு !!!



றெனிஸ் - இந்திய மண்ணில் றெனிஸ் உலகில் ஒரு இளம் புயல் உருவாகி வருகின்றது என்ற எண்ணம் தற்போது அதிகரித்து வருகின்றது. றெனிஸ் உலகில் சானியா மிர்சா (Sania Mirza) எவ்வளவு தூரம் தாக்கு பிடிப்பார் என்பது இனி நடக்கவிருக்கும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலேயே தெரிய வரும். ஆனால் அவுஸ்திரேலியா Open இலும், இந்திய Open இலும் றெனிஸ் ரசிகர்களின் எதிர்பார்ப்பை சானியா அதிகரிக்க செய்துள்ளார் என்பது உண்மை!.




இந்தியாவின் இளம் மங்கை சானியா மிர்சா ஹைதராபாத்தில் நடந்த றெனிஸ் போட்டியில் உக்ரைன் வீராங்கனை அல்யோனாவை இறுதிப்போட்டியில் வென்று கோப்பையை கைப்பற்றினார். வெற்றிப் புன்னகையோடு அவர் கோப்பையை உயர்த்திப் பிடித்திருக்கும் காட்சி.

ஹைதராபாத் ஓபன் றெனிஸ் ஒற்றையர் இறுதிப்போட்டியில் இந்திய வீராங்கனை சாம்பியன் பட்டம் வென்று சரித்திர சாதனை படைத்தார்.

இந்த வெற்றியின் மூலம் மகளிர் சுற்றுப்பயணப் போட்டியில் முதலாவது பட்டம் வென்ற இந்திய வீராங்கனை என்ற பெருமையை அவர் பெற்றிருக்கிறார்.

சர்வதேச அளவிலான மகளிர் சுற்றுப் பயணப் போட்டியில் முக்கிய போட்டிகளில் ஒன்றான ஹைதராபாத் ஓபன் றெனிஸ் போட்டி ஆந்திராவில் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்ற இந்திய வீராங்கனை சானியா மிர்சாவும், உக்ரையன் வீராங்கனை அல்யோனா பான்டென்கோவும் மோதினர். பரபரப்பான இந்த இறுதிப்போட்டியில் சானியா மிர்சா அபாரமாக 6-4, 5-7, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் பெற்றார்.

கடந்த மாதம் நடைபெற்ற இந்த வருடத்தின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபனில், மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்று சானியா மிர்சா புதிய சாதனை படைத்தார். மூன்றாவது சுற்றில் சானியா, சாம்பியன் பட்டம் வென்ற அமெரிக்க வீராங்கனையான செரீனா வில்லியம்சிடம் தோல்வி அடைந்தார்.

ஆனால் அவர் மூன்றாவது சுற்றுக்கு தகுதி பெற்றதன் மூலம் இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் பிரபலம் பெற்ற வீராங்கனையாக மாறிவிட்டார். இப்போட்டியில் தகுதிநிலை பெறாத நிலையில் 18 வயதான சானியா மிர்சா, வெகு நேர்த்தியாக வும், திறமையாகவும் ஆடி 9ஆம் நிலை வீராங்கனையான அல்யோனாவை வென்றது பாராட்டத்தக்கது.



இந்திய இளம்புயல் சானியா மிர்சா ஹைதரா பாத் ஓபன் றென்னிஸ் பட்டத்தை வென்று கோப்பையை கைப்பற்றினார். கோப்பையை அவர் உயர்த்தி பிடித்திருப்பதையும், அருகில் தோல்வியடைந்த உக்றெய்ன் வீராங்கனை அல்யோனா இருப்பதையும் படத்தில் காணலாம்.

சானியா மற்றும் பான் டென்சோ இருவரும் முதல் முறையாக இறுதிப்போட்டியில் பங்கேற்று ஆடியதால் இருவரும் சிறிது பதட்டத்துடன் ஆடினர்.

இரண்டு மணி நேரம் நடந்த இறுதிப் போட்டியில் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் சர்வதேச தரவரிசைப்பட்டியலில் 102 வது இடத்திலிருக்கும் உக்ரையன் வீராங்கனையை இரண்டு வயது குறைவான சானியா கடும் சவாலுக்கு இடையே வெற்றி பெற்றார். முக்கியமாக 3-வது செற்றில் சானியா அதிகமான பதட்டத்துடன் காணப்பட்டார். ஆனால் இறுதியில் தன்னம்பிக்கையுடன் போராடி அல்யோனாவை வென்றார்.

## எஸ். கணேஷ்



பரிஸில் நடைபெற்ற 13-வது ஓபன் காஸ் டி பிரான்ஸ் றென்னிஸ் போட்டியில் பட்டம் வென்ற ரஷியாவின் டினாரா சஃபீனா (வலது) , இரண்டாவது இடம்பிடித்த பிரான்ஸ் மங்கை அமெலி மௌரெஸ்மோ.

### நாங்க ஜெயிச்சிட்டோம் !!!



தென்ஆபிரிக்காவில் பிரிட்டோரியாவில் இங்கி லாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று, தொடரைக் கைப்பற்றிய குதூகலத்தில் தென் ஆபிரிக்க அணியின் மகாயா நிதினி, ஆஷ் வெல் பிரின்ஸ், அணித்தலைவர் கிரேம் ஸ்மித்.

### இரட்டை வெற்றி!




தென்ஆபிரிக்கா அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரின் முடிவில், ஆட்ட நாயகன் மற்றும் தொடர்நாயகன் விருதைப் பெற்ற பூரிப்பில் இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் கெவின் பீட்டர்சன் திளைக்கிறார். இப்போட்டித் தொடரை தென்ஆபிரிக்கா கைப்பற்றியது.


ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: **416-286-2880**


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 161



**இட - வல**

1. சிலப்பதிகார காலத்தில் தமிழ் நாட்டில் பாவனையில் இருந்த ஒரு நரம்பிசைக்கருவி
3. ஆழிப்பேரலை (வல - இட)
4. மலர்
5. உட்கார் (வல - இட)
6. ஒரு மிருகம் (வல - இட)
7. நாங்கள் (வல - இட)
9. ஆறாவது அறிவு
10. இனிமை
11. பிரியம்

**மேல் - கீழ்**

1. இஸ்லாமியர் நோன்பு முடிவில் உண்ணும் பழம்
2. பிரயாணம்
3. முறம்
6. தோல் வாத்தியம் ஒன்று
7. பெண் எருமை
8. மிகு மகிழ்ச்சி
10. நெருப்பு
11. புத்தி கூறு (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | ற் | று | ப் | பு | ற | ம் | |
| ற் | | யி | | ன | | ஒ | டு |
| ற | | க | ன் | ன | ம் | | |
| த் | | | கூ | கை | | வி | பு |
| தா | ள் | | | | | | ண் |
| ர் | | உ | த் | த | மி | | ணா |
| | | ர | | ளை | வா | | க் |
| ரி | லூ | ல் | க | | சு | | கு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் March 28, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**160இல் வெற்றி பெற்றோர்**

1) P. Shanmugam, Donmills
2) Sarojini kadirgamarajayogan, Scarborough


• ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
• அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
• வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



தமிழர் நிர்வாகத்தில் ஒரு

EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்



• வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
• இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
• இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

4 1 6 - 3 3 2 - 8 4 5 1

Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944

# புதிய வீடுகளின் விற்பனையில் பாதிப்பு




## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

எதிர்பாராத அளவிற்கான குளிர்கால நிலை ஜனவரி 2005இல் புதிய வீட்டின் விற்பனையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ரொறொன்ரோவின் பெரும்பாகத்தில் வீட்டின் விற்பனையில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் வீடுகளின் நிர்மாண கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இந்த மாதம் 2134 வீடுகளே விற்கப்பட்டுள்ளதாக தெரிவித்த GTHBA (Greater Toronto Home Builders Association) 2004ஆம் ஆண்டு ஜனவரியில் விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையை விட 19% குறைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. புதிய வீடுகளின் விற்பனையில் தளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் Housing Analyst will Dunning தெரிவித்துள்ளார். இதற்கான காரணமாக நிர்மாணத்துறையில் ஏற்பட்ட தொழில் ரீதியான செலவு அதிகரிப்பு, பொருட்களின் விலையில் ஏற்பட்ட மேலதிக அதிகரிப்பை வீடு வாங்குபவர்களிடம் இருந்தே பெற வேண்டியதால் வீட்டின் விலை அதிகரிப்பதால், வீடு வாங்குபவர் தயக்கம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும், புதிதாக நிர்மாணிக்கப்படும் அடுக்குமாடிக் கட்டிடங்களின் விற்பனை (Condominium) அதிகரிப்பதாகவும் தெரிகின்றது. இதற்கு கொண்டோக்களின் விலையில் மேலதிக அதிகரிப்பு ஏற்படாததே காரணமாகும். ஜனவரியில் விற்கப்பட்ட மொத்த வீடுகளின் தொகையில் 2/3 பகுதி கொண்டோக்களாகவும், 1/3 பகுதி கொண்டோக்கள் தவிர்ந்தவையாகவும் காணப்படுகின்றன. இந்த தகவல்களைக் கொண்டு இந்த வருடத்தின் மிகுதிப்பகுதியில் என்ன நடக்கும் என்று எதிர்வு கூறுவது கடினமாக உள்ளதாக Home Analyst will Dunning தெரிவித்துள்ளார். புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகளுடன் ஒப்பிடும் போது, ஏற்கனவே கட்டப்பட்டு, திருப்பி விற்கப்படும் வீடுகளின் விலையில் ஜனவரியில் அதிகரிப்பு (Resale Homes) ஏற்பட்டுள்ளது.

ஒப்பீட்டு ரீதியில் முந்தைய ஆண்டு ஜனவரி (2004 ஜனவரி) யைவிட விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் சிறிய தளர்ச்சி ஏற்பட்டதை முந்தைய இதழில் எழுதியுள்ளேன். எதிர் காலங்களில் நடைபெறும் நிகழ்வுகளைப் பொறுத்தே வீட்டுச் சந்தையின் போக்கு தெரியவரும்.






## YARL WINDOW

### BLINDS & DRAPERY



BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



**Taunton(Steels)/Westny**



Brand New Detached 2-Story
Tribute Builders, 9'Ceiling
50' Frontage, over $40k Upgrades
3198 SFT, Hardwood Floor
4 Bedrooms, 4 washrooms

**$439,900**

**Markham/Highglen**



Brand New Condo Apt.
5 New Appliances
2+Den Bedrooms
(Can be used as Bedroom)
2 Washrooms, 1 Kitchen

**$208,900**

**Kennedy/Ellesmere**



Condo Townhouse
New Painted, Low
Maintenance Fee
3 Bedrooms, 2 Washrooms

**$209,900**

**Kennedy/Sheppard**



Condo Apt.,Newly Painted
2 Bedrooms, 1 Washrooms
1 Kitchens
Close to Go Station

**$139,900**

**Store And Apartment In Toronto Store About 1500 Sft With Full Basement**
**2 Apartments 3 Bedrooms Each, Big Lot, Good Income**
**Store (Variety) Rented For $2000/Mth**
**GOOD INVESTMENT!**

Excellent Bargain
Store (Near Main/Danforth)
Over 2200 Sft, Full Basement
Low Rent, Established
Business For 10 Years
Asking $119,000

HOMELIFE HIGHER STANDARDS

**Raja Mahendran, P.Eng.**
Broker/Owner
**Cell: 416.315.9397**
**Off : 416.321.6969**



**HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd, Suite 206, Toronto, ON M1S-3Y3**

# கடல் மறுபடியும் வந்தபோது

உங்கள் முன் நின்று நான் உயிர் பிழைத்த கதையைச் சொல்வதில் ஒரு நியாயமும் இல்லை. என் குரல் என்னுடையது தானா? அல்லது இந்தோனேசியாவிலும், இலங்கையிலும், தாய்லாந்திலும், இந்தியக் கடலோரப் பகுதிகள் நிறைந்திருக்கும் பல்வேறு அகதிகள் முகாம்களிலும் நிவாரண மையங்களிலும் வாடிக் கிடக்கும் பெயரற்ற, குரலற்ற பல்லாயிரக்கணக்கான மக்களுடையதா என்று யோசிக்கின்றேன்.

நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். எங்கள் பிராந்தியத்தில் மலைகள் இல்லை. ஆறுகள் இல்லை. பருவ மழை போதவில்லை. அது வருமா என்று நிச்சயமாகச் சொல்ல முடிந்ததுமில்லை. எனது பூமியில் எதுவுமே இயற்கையாக விளையவில்லை, ஆண்களின் தாடியைத் தவிர. ஆனால் நாங்கள் கடலோடு வாழ்ந்தோம். எங்களிடம் இருந்த ஒரே அழகான இயற்கைச் சொத்து கடல். பரந்த, திறந்த கடல். அது எப்போதும் நீலமாக இருந்ததில்லை.

நான் எழுதி, பிரசுரிக்கப்பட்ட முதல் கவிதை 1975ல் 'அலை' இலக்கிய சஞ்சிகையில் வந்தது. அந்தக் கவிதையின் பெயர் 'கடல்'. சுனாமிக்குச் சில நாட்கள் முன்னதாக இந்தியாவில் வெளியிடப்பட்ட எனது ஏழாவது கவிதைத் தொகுதியின் பெயர் 'மீண்டும் கடலுக்கு'. எனது கற்பனைகள், சிந்தனைகள், கனவுகள் எல்லாம் எப்போதுமே கடல், அதன் வடிவங்கள், ஓசைகள், வண்ணங்கள், ஆழம் ஆகியவற்றுடன் பிரிக்க முடியாத வகையில் இணைந்திருந்தன.

சுனாமி தாக்கிய கோரமான தினமான 2004 டிசம்பர் 26ம் திகதி நான், என் சகோதரி, அவருடைய கணவர், மற்றும் அவர்களின் இரண்டு குழந்தைகளுடன் இலங்கையின் தென்பகுதிக் கடலோரக் கிராமமான பெந்தோட்டைக்குச் சென்றிருந்தோம். மீன் பிடிக் கிராமமான இக் கிராமத்தில் நிறைய சுற்றுலாத் தளங்கள் நிறைந்த இடம். பௌர்ணமிக் காலம் என்பதால் இலங்கை மக்கள் நிறையப்பேர் குடும்பத்துடன் இங்கு வந்திருந்தனர்.

காலை எட்டு மணி நாற்பத்தைந்து நிமிடம். காலை சிற்றுண்டியை முடித்துக் கொண்டு அப்போது தான் திரும்பி வந்திருந்தோம். குழந்தைகள் நீச்சல் குளத்தில் இருக்க விரும்பினார்கள். நாங்கள் நீந்தலாமா? அல்லது அரைத் தூக்கம் போடலாமா? என்று கையில் புத்தகத்துடன் யோசித்துக் கொண்டிருந்தோம். கடற்கரையில் அமர்வதற்காக நாங்கள் நாற்காலி-களைத் தேடியபடி நடக்கத் தொடங்கியதும், நான் ஒரு வினோதமான காட்சியைக் கண்டேன். நாங்கள் கடலுக்கு அவ்வளவு அருகில் இல்லை. ஆனால் கடல் நீர் ஆக்ரோசமான வேகத்தில் எங்களை நோக்கி வருவதைப் பார்த்தேன். அறிவுக்கு அது ஒன்றும் உறைக்கவில்லை. ஆனால் என் உள்ளுணர்வுக்கு உறைத்தது. நாங்கள் ஓட, கடல் எங்களைத் துரத்தியது. என் வாழ்க்கையில் நான் அவ்வளவு வேகமாக ஓடியதில்லை. 1980 களில் இலங்கைச் சிப்பாய்கள் துப்பாக்கியுடன் துரத்தி வந்த போது கூட.



எனது சகோதரி தனது உள்ளுணர்வை தக்க சமயத்தில் பயன்படுத்தி தனது மகள்களைத் தூக்கிக் கொண்டு ஓடினார். உயர்ந்து வரும் நீர் மட்டத்தையும், மிதக்கும் சிதிலங்களையும் குறைந்து வரும் நம்பிக்கையையும் நாங்கள் கடும் சிரமத்துடன் சமாளித்தோம். அந்த விடுதியில் எங்கள் அறை மூன்றாவது தளத்தில் இருந்தது. எழும்பும் அலைகளை தள்ளி நாங்கள் எங்கள் அறையை அடைந்தோம். ஆனால் நாங்கள் எங்கள் அறையை அடைகின்ற சமயம் முதல் தளம் முற்று முழுதுமாக கடல் நீரால் மூழ்கி விட்டிருந்தது. இருபது நிமிடங்கள் இருக்கலாம். கடல் நீர் தரையில் இருந்த எல்லாவற்றையும் வாரிச் சுருட்டிக் கொண்டு மறுபடியும் கடலுக்குத் திரும்பிச் சென்றது.

அதற்குப் பிறகு ஒரு மௌனம். என்ன நடந்தது

## சேரன்

என்று எனக்குத் தெரியவில்லை. இது ஒரு அசாதாரணமான நிகழ்வு என்பது மட்டும் எனக்குப் புரிந்தது. இந்த நீர், நான் அறிந்த, நேசித்த, மனதில் வைத்துப் போற்றிய நீர் அல்ல.

நாங்கள் பெட்டி, பைகளுடன் கிளம்ப முடிவு செய்தோம். ஆனால் அது சாத்தியமாகவில்லை. கடல் மறுபடியும் திரும்பி வந்தது, பழிவாங்கும் வெறியுடன். இம்முறை அலைகள் இராட்சத விலங்குகளாக உருமாறி இருந்தன. அவை எங்கள் விடுதியின் இரண்டாம் தளம்வரை எழுந்து கண்ணாடி, ஜன்னல்கள், கதவுகள் என்று எல்லாவற்றையும் தாக்கி நொறுக்கின. பிளாஸ்டிக் பொம்மைகள் போல் விசிறி அடித்தன.

அதிஸ்டவசமாக நாம் இருந்த மூன்றாவது தளத்தை கடல் நீர் தொடவில்லை. மறுபடி கடல் பின்வாங்கியது. நாங்கள் இந்த இடத்தை விட்டுத் தப்பவேண்டும் என்ற உணர்வோடு, படிகளில் இறங்கிச் சென்றோம். வேகம் குறைந்திருந்த இடுப்பளவு நீரினூடே நடந்து போனோம். அப்படியே சமாளித்துப் பெந்தோட்டை இரயில் நிலையத்திற்குச் செல்லும் சாலையை அடைந்தோம். அதுதான் நாங்கள் கண்டுபிடிக்க முடிந்த மிக உயரமான நிலப்பரப்பு. பிறகு நடந்ததெல்லாம் கனவுதான்.

இராட்சத அலைகள் மூன்றாம் முறையாகத் தாக்கிய போது நாங்கள் பத்திரமாக கொழும்பிற்குச் சென்று கொண்டிருந்தோம். அந்த அலையில் நாம் தங்கியிருந்த விடுதி காணாமல் போயிருந்தது.

கடல் மறுபடியும் திரும்பி வந்தது, பழிவாங்கும் வெறியுடன். இம் முறை அலைகள் இராட்சத விலங்குகளாக உருமாறி இருந்தன. அவை எங்கள் விடுதியின் இரண்டாம் தளம் வரை எழுந்து கண்ணாடி, ஜன்னல்கள், கதவுகள் என்று எல்லாவற்றையும் தாக்கி நொறுக்கின. பிளாஸ்டிக் பொம்மைகள் போல் விசிறி அடித்தன.

இப்போது, கண்ணாடி உடையும் சத்தமும் அலை மோதும், சத்தமுமாக வந்த பயங்கரக் கனவுகள் நிறைந்த 11 நாள்களுக்குப் பிறகு, நான் எப்படி உயிர்பிழைத்தேன் என்பதுதான் எனக்கு நினைவில்லை. ஆனால் எனக்கு நன்றாக நினைவிருக்கும் ஒரு விசயம். அலையின் வண்ணம். அது நீலம் அல்ல. இப்போது எனக்கு கடலுடன் அதே உறவு இல்லை. அது நிரந்தரமாக மாறிவிட்டது. அது கடுமையாகக் காயமடைந்திருக்கிறது.

பேரழிவுகள் எப்போதுமே மனிதர்களிடம் சிறந்த குணங்களையும் மிக மோசமான குணங்களையும் வெளியே கொண்டுவருகின்றன என்பதை நாமெல்லோரும் அறிவோம். நான் பேசும் இக்கணத்தில் இரண்டையுமே பார்க்கிறோம். இருந்தாலும் இங்கும் எல்லா இடங்களிலும் சாமானியர்களின் தாராள குணம், அரசுகளின், சர்வதேச அமைப்பு களின் பாசாங்குத்தனங்களைத் தாண்டி நிற்கின்றது. இப்போது நாம் மனித இனத்தின் மீது முழு நம்பிக்கை



தொடர்ச்சி 18ம் பக்கம்


# நியூ சங்கர் அன்கோ





கலர் காப்பு வகைகள் மலிவு விலையில்
Non Stick அப்பச் சட்டி $9.99
சமையல் பாத்திரங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
கரம்போட்
சுவாமி படங்கள்
Rice Cooker
Pressure Cooker
Steamer
Roti Maker
Preethi Mixie



பஞ்சாபி, லங்கா சூட் - $9.99 தொடக்கம்
சாறி பிளவுஸ் - $1.49 தொடக்கம்



Audio CD - .99¢ தொடக்கம்
Audio - .79¢ தொடக்கம்

416.750.2370

2365 Eglinton Ave., Scarborough, ON

# பொக்கணை

‘ஹலோ’
‘வணக்கம், ஐயா.’
‘வணக்கம்’

‘பொக்கணை என்றால் என்ன பொருள் ஐயா?’

‘பொக்கு (பொக்கை) என்ற சொல்லுக்கு துளை அல்லது பள்ளம் என்று பொருள். பொக்கை வாய் என்றால் ஒறுவாய். பல்லுப்போனவாய். பொக்கு என்ற சொல்லில் இருந்து வந்ததுதான் பொக்கணை என்பது மரப் பொந்து, குளம், கிணறு என்று குழிவிழுந்த இடங்களைக் குறிக்கும் சொல் இது. நீர் யாழ்ப்பாணம் போயிருக்கிறீரா?’
‘போயிருக்கிறன்?’

‘ஊரெழு என்ற ஊர்பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீரா?’

## அறுவை - 37

‘கேள்விப்பட்டிருக்கிறன். திலீபன் பிறந்த ஊரெல்லே!?’

‘திலீபனின் தியாகம் அவனது ஊரையும் தமிழர் வாழும் இடம் எல்லாம் உயர்த்திவிட்டது. அதற்கு முன்னதாக நான் ஊரெழுவை அறிந்தது எனது நண்பர் ஆசிரியர் தனேஸ்வரன் மூலமாகத்தான். அவர் ஒரு விளையாட்டுத்துறை வல்லாளர். நல்ல பேச்சாளர். அவரது தந்தையார், பல ஊர்க்காரரும் தேடிச்சென்ற சாத்திரியார் வைத்தியலிங்கம் அவர்கள். அவராலும் ஊரெழுவைப் பலர் அறிந்திருந்தார்கள். அவரது மற்றொரு மகன் கணேசலிங்கம் இங்கு கனடாவில் தந்தையாரின் பெயரை விளங்கவைத்துக் கொண்டிக்கிறார். உமக்கு இந்தப் பொக்கணை என்ற சொல் எப்படித் தெரியவந்தது’
‘இரயிலில் ஒருவர் பொக்கணை என்ற புத்தகம் ஒன்றை வைத்திருந்தார். கொஞ்சம் வித்தியாசமான சொல்லாக இருந்தது. நினைவில் நின்றுவிட்டது.’
‘அது புத்தகமல்ல. ஒரு மலர். ஊரெழு ஒருங்கிணைப்புக் கழகத்தின் தீப விழா 2004 வெளியீடு. ஊரெழுவின் சிறப்பு, மைந்தர்கள் மற்றும் கவிதைகள், இலக்கியக்கட்டுரைகள் அடங்கிய நல்லதொரு பொக்கணை. ஊரெழுவில் ஓர் ஆழக்கிணறு உள்ளது. அதற்குப் பொக்கணை பெயராகிவிட்டது. பொக்கணை ஆழக்கிணறு மட்டுமல்ல, இறைக்க இறைக்க வற்றாத கிணறுமாகும். இப்படிக்



கிணறு உமது ஊரில் எங்கேனும் இருக்கா?’
‘பிறந்த மாத்தளையிலும் இல்லை. கல்யாணஞ் செய்த நீர்கொழும்பிலும் இல்லை’
‘இத்தகைய கிணறுகள் சுண்ணாம்புக்கற் பிரதேசங்களில் தோன்ற வாய்ப்புண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்திய பகுதி சுண்ணாம்புக்கல் நிலங்களைக் கொண்டது. தரைக்கீழ் நீர் (Underground water) சுண்ணாம்பைக் கரைக்கும் அல்லது அரிக்கும் இடங்களில் குகைள் ஏற்படுவதுண்டு. குகையின் மேற்கூரை உடைந்து விழும் இடங்களில் குளங்கள் அல்லது கிணறுகள் தோன்றும். யாழ்ப்பாணத்தில் ஊரெழுவில் உள்ள பொக்கணை, நவக்கிரியில் உள்ள நிலாவரை, குரும்பசிட்டியிலுள்ள பேய்க்கிணறு என்பன இவ்விதத்தில் தோன்றியவை.

‘நிலத்திற் பெய்யும் மழையின் ஒரு பகுதி ஆவியாகின்றது. இன்னொரு பகுதி உயிரினங்களாற் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பகுதி குளங்களையும் ஆறுகளையும் சென்றடைகின்றது. ஆற்றுநீர் கடலுடன் கலந்து விடுகிறது. எஞ்சிய பகுதி நிலத்து மண் வழியாகவும் பாறைவெடிப்புகள் வழியாகவும் வடிந்து தரைக்குக் கீழ் தங்கிவிடுகிறது.’

‘தரைக்கீழ் நீருக்கு ஒரு மட்டம் இருக்கிறது. (Water Table) மாரியில் நீர்மட்டம் உயர்ந்தும் கோடையில் தாழ்ந்தும் காணப்படும். கோடை நீர்மட்டத்துடன் தொடர்புடைய கிணறுகள் வற்றாக் கிணறுகளாக இருக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆறுகள் இல்லாததால் நீர் பெருமளவில் தரைக்கீழ் நீர் ஆகிவிடுகிறது. இதனாலேயே வீட்டுக்கு ஒரு கிணறு அங்கு வைத்திருக்கு முடிகிறது. இதனாலேயே ஆறு இல்லாத போதிலும் யாழ்ப்பாணத்து அழகு பாழாகாமல் இருக்கிறது. ஊரெழு பொக்கணை நீரை இறைக்க நீர்ப்பாசன இலாகா காற்றாடி இயந்திரம் ஒன்றை நிறுவி நீர்த்தொட்டியும் கட்டியது. நீர்த்தொட்டியிலிருந்து வாய்க்கால் மூலம் பயிர் செய் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியும் செய்யப்பட்டிருந்தது. பிற்காலத்தில் இவை பாழடைந்து விட்டன. இப்பொழுது அரசாங்கம் இத்திட்டத்தைப் புனரமைக்கத் தொடங்கியுள்ளது.

ஊரெழுவில் இயற்கையாக அமைந்த உன்னத ஊற்றான பொக்கணையை ஊரெழு ஒருங்கிணைப்புக் கழகம் முதன் முதலாக வெளியிட்டிருக்கும் மலருக்கும் பெயராக வைத்துள்ளது. செயலாளர் பகீரதன்



பஞ்சலிங்கம் (முத்து) அவர்கள் இதற்கான காரணத்தை மிக அழகாகத் தந்திருக்கிறார் கேளும்:

“வற்றா ஊற்றாகப் பொங்கிக் கொண்டிருக்கும்
பொக்கணைக் குன்று போன்று ஊரெழு மக்களின்
மனங்களில் எப்பொழுதும் எழுச்சியும்
மகிழ்ச்சியும் புகழ்ச்சியும் வற்றாது பொங்கிக்
கொண்டிருப்பதாலும், அவர்களின்
அறிவும் ஆற்றலும் வற்றா ஊற்றைப்
போன்றே ஊறிக்கொண்டிருப்பதாலும்
மண்ணையும் மக்களையும் வளப்படுத்தி
வாழவைத்துக்கொண்டிருக்கும் இவ்
வூற்றுப் போன்று தன்னலம் கருதாத
தியாகிகளைக் கொண்ட ஊரே ஊரெழு
என்பதாலும் ‘பொக்கணை’ என்ற பெயரே
இம்மலருக்குப் பொருத்தமானதாகக் கருதி
பெயரிட்டுள்ளோம்”

வேறு என்ன, இப்பொழுது உமது மொழி அகராதியில் ஒரு சொல் கூடியிருக்கு’

‘நன்றி ஐயா’

‘சந்திப்போம் வணக்கம்’

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



கவிஞர் வி. கந்தவனம்


Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

‘தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை’

# நீலம் சில்க்



- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

2005ஆம் ஆண்டின் புதிய பாரம்பரிய பட்டு ஆடைகள், சுரிதார், லங்கா சூட், தெரிவுகள், ஆண்கள், சிறுவர், சிறுமியர், ஆடைகள் மற்றும் பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

“நீலம் சில்க்”

**T.P: 416-778-7455 Fax: 416-778-8484**

1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

**T.P: 416-759-2002**

2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)



# ONTARIO REHABILITATION & RECOVERY CENTRE

- வாகன விபத்து
- விளையாட்டு முறிவு, தறிவு
- தசை நார் ஈய்வு
- நாரி நோவு, பிடிப்பு
- வேலைத்தள பாதிப்பு
- முள்ளந்தண்டு விலகல்
- கழுத்து பிடிப்பு
- பழைய நோவு

போன்றவற்றிலிருந்து மீள்வதற்கான பராமரிப்பு, உடற்பயிற்சிகள், தகுந்த ஆலோசனைகளிற்கான மையம்.

அக்குபஞ்சர் மற்றும் லேசர் மருத்துவம் போஷாக்கு பற்றிய அறிவுரை பராமரிப்பு.

**Specialists In:**

Chiropractic, Massage Therapy, Acupuncture, Laser Therapy, Physiotherapy and Exercise / Sports Injuries

# Tel.: 416.291.0299

Fax:416.291.0994

240 Alton Tower Circle, Unit 200

Scarborough, ON M1V 4P2







Niru •BRAND®
'நிரு' தயாரிப்புக்கள்'
கனடிய சுகாதார விதிகளுக்கமைய
கனடாவில் தயாரிக்கப்படுகின்றன
No.1
முதல் தரமான
மிளகாய், மல்லி
ஏனைய
சரக்கு வகைகள்
கொண்டு
தயாரிக்கப்படுவதனால்
தரம்
No. 1
Manufacturers & Distributors of
Niru Brand® Products
NIRU ENTERPRISES INC.
76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
E-mail: niru@total.net Web: www.niru.com
Distributors in Europe
UK. Marketing Office: NIRU ( Europe) LTD.
Unit 11, Mitcham Industrial Estate, 85, Streatham Road,
Mitcham, Surrey, CR4 2AP,
U.K. Tel.: 44 + 208 640 8228
Fax: 44 + 208 640 8312
வறுத்த மிளகாய்த்தூள்
ROASTED
CURRY (CHILLI) POWDER
POUDRE DE CURRY (ROTIES)
JAFFNA
Hot Curry Powder
POUDRE DE CURRY JAFFNA (PIQUANT)
Free Spoon Inside

# ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்து கொள்வதில் ஒருவர் காலதாமதம் செய்தால் என்ன நடக்கும்?

1. எதிர்பாராத வகையில் 'உயிர் இழப்பு' அதாவது வாழ வேண்டிய வயதில் ஏற்படும் (Prematured Death) என ஒன்று எந்த நேரமும் எவருக்கும் எந்த ரூபத்திலும் வரலாம் என எல்லோரும் எதிர்பார்த்து இருப்பதால் அப்படியொரு நிலைமை வந்தால் தங்கியிருப்பவர்களுக்கு ஆயுள் காப்புறுதியில் இருந்து கிடைக்கும் ஒரு ரொக்கப் பணம் தொடர்ச்சியாக தங்கியிருப்பவர்கள் வாழ்வினை தொடர்வது மட்டுமல்லாது ஏதோ ஒரு வகையில் அது சற்று ஆறுதலாகவே இருக்கும் என்பதில் சந்தேகமே இருக்கமாட்டாது.

ஆனால் சேர்வதில் காலதாமதம் செய்து இழப்பு ஒரு இழப்பு நடந்தால் எதுவிதமான நட்டஈடும் இல்லாமல் போய்விடுகின்றது.

2. வயது அதிகரிக்க அதிகரிக்க ஆயுள் காப்புறுதிக்காக செலுத்தவேண்டிய மாதக் கட்டுப்பணம் அதிகரித்துக் கொண்டே போகும். குறைந்த வயதுகளில் மிக திறமையான நல்ல திட்டங்களில் சேரலாம். உதாரணமாக - சில ஆயுள் காப்புறுதி திட்டங்களில் குறிப்பிட்ட சில வருடங்களின் பின்பு மாதக் கட்டுப்பணம் செலுத்த வேண்டிய அவசியமே இல்லாத திட்டங்கள் அநேகமான கம்பனிகள் சந்தைப்படுத்துகின்றன. இது எவ்வளவு ஆறுதலான விடயம். வாழ்வில் ஏற்படப் போகும் என எதிர்பார்க்கும் உயிர் ஆபத்திற்கு மேலாக தமது சந்ததிக்கு வழங்க உள்ள பெரிய முதலீட்டுத் தொகைக்கு மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை எனச் சில குறிப்பிட்ட வருடங்கள் பணம் செலுத்திவிட்டு பின்னர் செலுத்தவே தேவையில்லாது இருப்பது ஆகும்.

3. மூன்றாவதாக குறிப்பிடப் போகும் விடயம் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேரப் போவதில் காலதாமதம் செய்பவர்கள் அறிந்திருக்க வேண்டிய மிக எச்சரிக்கையான ஒரு விடயமாகும்.

அதாவது உடலில் ஏதாவது நோய்கள் பீடிக்கப்பட்டு மருந்து எடுத்துக் கொண்டு இருக்கும் நிலைமைகள் அல்லது இத்தகைய உடல் நோய்களில் இருந்து மீள முடியாத நிலைமைகள் என ஏதாவது ஏற்பட்டால்,

அ. ஒன்றில் மாதக் கட்டுப்பணத்தினை அதிகரிப்பார்கள். அல்லது


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


ஆ. ஆயுள்காப்பறுதி ஒப்பந்தத்தில் சேரமுடியாது என நிராகரிப்பார்கள்.

இவ்வாறு ஒரு கம்பனியினால் நிராகரிக்கப் பட்டால் அது ஏனைய எந்தவொரு கம்பனியிலும் புதிதாக விண்ணப்பிக்கும் போது பதிவுகளில் (Record) காட்டும். பொதுவாக ஒவ்வொரு கம்பனிக்கும் ஆயுள் காப்புறுதிக்கு மனு செய்யும் போது கேட்கப்படும் முக்கியமான கேள்விகளுள் ஒன்றாக ஏற்கனவே இன்னொரு கம்பனியினால் அதிக விலை கொடுக்க வேண்டும் என்றோ அல்லது நிராகரிக்கப்பட்ட நிலைமை ஏற்பட்டதா? என்ற விடயம் ஆகும். அதனை புகுந்து ஆய்வு



செய்வார்கள்.

இன்னொரு கம்பனியினால் நிராகரிக்கப்பட்டது அல்லது அதிக விலை செலுத்த வேண்டும்? (Rating) எனக் கோரப்பட்டது என்ற பதிவுகள் புதிதாக விண்ணப்பித்து பரிசீலனை செய்யப்போகும் கம்பனியின் பார்வையில் எப்போதும் ஒரு சிவப்புக் கோடாகவே இருக்கும்.

குருதியில் கொலஸ்ரோல், சீனியின் அளவு அதிகரிப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஆயுள் காப்புறுதியில் சேர்வதற்குரிய தடைகளுக்கு உதாரணமாகும்.

**குருதியில் கொலஸ்ரோல், சீனியின் அளவு அதிகரிப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஆயுள் காப்புறுதியில் சேர்வதற்குரிய தடைகளுக்கு உதாரணமாகும்.**

எனவேதான் ஆரோக்கியமான நிலைமையில் இருக்கும் போதே சேர்ந்துவிட வேண்டும். இங்கு மருத்துவ புலனாய்வுகள் என்பதனை ஆயுள் காப்புறுதி, கம்பனி துருவித் துருவி ஆராய்ந்து அறியும் போது ஆரோக்கியமாக இருந்து விட்டால் சரி. இதனால் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேர்ந்த பின்பு ஏற்படப்போகும் நோய்களைப் பற்றிக் கவலையே இல்லை.

4. ஆயுள் காப்புறுதியில் சேர்வதற்கு தடையாய் உள்ள ஏனைய விடயங்கள், உடல் நிலை மட்டுமன்றி

அ. குற்றவியல் சம்பவங்களில் (Criminal record) தண்டிக்கப்பட்டாரா?
ஆ. வாகனம் ஓட்டும்போது அதிகம் முறை தண்டிக்கப்பட்டாரா? (Driving Convicting)
இ. வருமானம், தொழில்கள்
ஈ. வங்குரோந்து நிலைமைக்கு விண்ணப்பித்தல் போன்ற விடயங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆயுள் காப்புறுதியில் சேர்வதற்கு தடையுள்ள தாகவே இருக்கும்.

ஏனெனில் ஆயுள் காப்புறுதியில் சேர்பவர் தொடர்பான மேற்குறிப்பிட்ட இந்த விடயங் களையும் புலனாய்வு செய்வார்கள்.

இதில் குறிப்பிட வேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால் ஒருவர் ஆயுள்காப்புறுதியில் சேர்ந்த பின்னர் மேற்குறிப்பிட்ட என்ன பிரச்சினையும் வரலாம். கவலையேபட வேண்டிய தில்லை. ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் கம்பனி யினால் செலுத்தத் தொடங்கி பத்திரத்தினையும் தாங்கள் கையில் பெற்றுவிட்டால் ஆயுள் காப்புறுதியில் சேருவதில் பிரச்சினை கள் வருமா? என்ற கேள்விக்கே இடமில்லை.



முடிவு! காலதாமதமின்றி சேர்ந்து கொள்வதே.


## கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் **நந்தா**





**Nantha Aiyadurai**, B.Eng.
Sales Rep.
**Office :** **613.823.7555**
**Cell :** **613.866.9931**
**Toll Free :** **1 800 472.6512**

COLDWELL BANKER
Coldwell Banker Coburn Realty



## DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது
Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution
Lendingtree.ca

# பசித்திரு, தனித்திரு, விழித்திரு சிவாயுச்சியப் பதவிக்கு அதுவே வழி

## சிவராத்திரி விரதம்

*செங்கணானும் பிரமனும் தம்முள்ளே*
*எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்*
*இங்குற்றே னென்று இலிங்கத்தே தோன்றினான்*
*பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே*

இது அப்பர் வாக்கு. இந்துக்கள் அனுட்டிக்கும் விரதங்களில் 'ராத்திரி' என்ற சொல்லைக் கொண்டவை இரண்டாகும். ஒன்று சிவராத்திரி. மற்றது நவராத்திரி. சிவனுக்குரியது சிவராத்திரி. அவன் தேவிக்குரியது நவராத்திரி. வருடந் தோறும் தேய்பிறைச் சதுர்த்தசித் தினத்தன்று இரவு பதினான் நாழிகைக்கு மேல் பதினாறு நாழிகைக்கு உட்பட்ட வேளையே மகாசிவாராத்திரி. இத்தினத்தன்று அடியார்கள் சிவன் ஆலயங்களுக்குச் சென்று உபவாசம் இருந்து, மௌன விரதம் அனுட்டித்து இரவு தூங்காமல் கண்விழித்திருந்து சிவலிங்க தரிசனம் செய்வதால் பல பிறவிகளின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுகபோக வாழ்வில் திளைப்பார் கள். இரவுமுழுவதும் கண் விழித்திருக்க முடியாதவர்கள் இலிங்க உற்பவ காலம் வரையிலான நடுநிசி நேரம் வரையிலாவது கண்விழித்திருந்து சிவதரிசனம் செய்வது உத்தமம். சிவராத்திரி தினத்தன்று வில்வத்தால் பூசை செய்வதற்கு புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவர். ஏனெனில் வில்வத்தால் பூசை செய்த வேடனும் குரங்கும் நற்கதி பெற்றதாகப் புராணக்கதை கூறுகின்றது. அத்துடன் பசித்திரு, தனித்திரு, விழித்திரு அப்பொழுது சிவாயுச்சியப் பதவி கிடைக்கும் என்பதற்கு அமைவான விரதம் சிவராத்திரியாகும்.

பெரியார், சிறியார் பேதம் பெருமைக்குரிய கடவுளர்களையும் விட்டு வைக்கவில்லைப் போலும். படைப்புக் கடவுளான பிரமாவுக்கும், காத்தல் கடவுளான திருமாலுக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டது. அவர்களது அகம் இருண்டது போல சகலதும் இருளத் தொடங்கி விட்டன. அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டி சிவன் அவர்களிடையே இலிங்கமாக முளைத்து சுடர்விட்டு விளங்கினார். அவர்கள் அதன் அடியையும் முடியையும் தேடிப் புறப்பட்டனர். அவர்களால் முடியவில்லை. முடிவில் செருக் கொழிந்து சிவனைச் சரணடைந்து உய்தி பெற்றனர். சிவனே முழுமுதற்கடவுள் என்பதும் உறுதியாயிற்று. சிவலிங்கம் ஒளிவடிவம். எனவே சிவன் சொக்கணைந்த சுடரொளி வண்ணன் என்றும் ஒளிநிற வண்ணன் என்றும் ஏறுகந்தேறெரி வண்ணன் எனவும் அழைக்கப் படுகின்றான்.

**நா.க. சிவராமலிங்கம்**

சிவராத்திரி - நித்தியசிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாதசிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐவகைப்படும். ஒவ்வொரு மாதத்திலும் தேய்பிறையின் போதும் வளர்பிறையின் போதும் வரும் சதுர்த்தசி திதி இரவுகள் நித்திய சிவராத்திரி எனப்படும். தைமாதம் தேய்பிறையில் வரும் சதுர்த்தசி இரவு பட்ச சிவராத்திரியாகும். மாதத்திற்கு மாதம் வேறுபட்ட திதிநாட்களில் இடம்பெறுவது மாத சிவராத்திரியாகும். சோமவாரநாள் என்று கூறப்படும் திங்கள்கிழமையன்று பகலும் இரவும், அறுபது நாழிகையும் அமாவாசை திதியும் பொருந்திவரின் அது யோக சிவராத்திரியாகும். இதனை வாரசிவராத்திரி என்றும் கூறுவர். ஒவ்வோர் ஆண்டும் உத்தராயணத்தில் வரும் மாசிமாதம் தேய்பிறை சதுர்த்தசி நாளன்று நடுநிசிவேளையே மகாசிவராத்திரியாகும். சிவன் பிரளயத்தை உருவாக்கி உயிர்கள் அனைத்தையும் சங்கரிக்கும் நாளே மகா சிவராத்திரி ஆகும். உணவும் உறக்கமும் இறைவழிபாட்டிற்கு தடையானவை. இவற்றை



நீக்குதற்குப் பல பயிற்சிகளை நாம் மேற் கொண்டு வருகின்றோம். குறித்த சில நாட்களில் உபவாசம் இருந்து உணவைச் சுருக்கின்றோம் அல்லது துறக்கின்றோம். அதுபோல் உறக்கத்தைத் துறப்பதற்கு உகந்த உயரிய நாளே சிவராத்திரியாகும். கண்ணைத் துயின்று அவமே காலத்தையே போக்காமல், கண்ணுதற் கடவுளை எண்ணி ஏற்றி பண்ணிசைத்துப் பரவும் நாள் சிவராத்திரியாகும்.

சைவர்கள் சிவராத்திரியன்று நோன்பு விரதம் மேற்கொண்டு பசித்திருந்து, விழித்திருந்து பரமனைப் பரவுகிறார்கள். வைணவர்கள் வைகுண்ட ஏகாதசியன்று பசித்திருந்து இரவு விழித்திருக்கிறார்கள்.

இருளிலே நல்லவை எல்லாம் நடுங்கி நலிவுறும். தீயவை எல்லாம் திளைத்துத் திரிவுறும். புற இருளே நம்மை அச்சுறுத்தி அல்லற்படுத்துமானால் அகத்தில் உள்ள இருளின் கொடுமைபற்றி கூறவே வேண்டிய தில்லை. அறியாமை, அஞ்ஞானம், மருள், மயக்கம், மடமை இவையும் கொடிய இருளேயாகும். இருளைப் போக்கி ஒளியைக் கொடுப்பதற்கும் அறியாமையைப் போக்கி சிவஞானத்தை அளிப்பதற்கும் சிவன் ஒருவனே வல்லவன். அவனை வழிபட்டு அவன் திரு வருளின் திறனாலேயே நாம் நம் அகவிருளை போக்கும் சிவஞான ஒளியைப் பெறுதல் கூடும். ஆண்டுக்கு ஒருமுறை வரும் சிவராத்திரி அதற்குரியதாகும்.

அரும்பெரும் சோதியாகவும், அருட்பெருஞ் சோதியாகவும் அருள் ஒளியாகவும் விளங்கும் சிவப்பரம் பொருளான தென்நாடுடைய சிவன் என் நாட்டவர்க்கும் இறைவனாக இருப்பதுடன் முன்னைப் பழம்பொருளான முதல்வனாகவும் விளங்குகின்றான். சிவாயநம என்று சிந்தித் திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை.


**யோகா சோதிடம்**

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

**NTE AUTO**
**New Trade Engineering Inc.**



ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence $75.00

Truck licence $899.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake $175.00

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618/416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**
5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# WAREHOUSE SALE



**நம்பிக்கை, தரம், குறைந்த விலையில் நிறைந்த பொருட்கள் விசேட மலிவு விற்பனையில் உண்டு.**



- நம்பமுடியாத, வேறு எங்கும் பெறமுடியாத விலையில் Blankets.
- விதம்விதமான Shirts, T Shirts வகைகள்
- பெரியவர்களுக்கான Gloves, Shoes
- சமையலுக்குத் தேவையான பொருட்கள்
- Traveling Suitcase

இன்னும் பல பொருட்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: Raja / Shawn

**(416) 412.6180**

**40 Nugget Ave.
Unit #8
Mccowan & Nugget**



# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை ஈழத்தமிழ் மகன்

**சோதீஸ்**

இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



## Winter Clearance Special

## 416-704-1179

**அலுவலக நேரம்**
Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm
Tues., Wed.: 12 noon - 9:00 pm
4334 Kingston Rd, Scarborough




# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

## YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

# நியூ ஜெகன் ஸ்ரோஸ்

## புதிய இடத்திற்கு மாறுவதை முன்னிட்டு

# விசேட மலிவு விற்பனை

09-02-2005 புதன்கிழமை தொடக்கம்

## அனைத்துப் பொருட்களும் நடைமுறை விலையிலிருந்து 10% - 40% கழிவு விலையில்

ஆனந்தவிகடன், குமுதம், ஜீனியர் விகடன், துக்ளக், நக்கிரன், ராணி, தேவி, குமுதம் ரிப்போட்டர், குங்குமம், கல்கி, கற்கண்டு, பால சோதிடம், வண்ணத்திரை, ராணி முத்து, கண்மணி, கோகுலம் - தமிழ், பாக்யா

**$1**

Not go with any other promotion or Special

சினிமா எக்ஸ்பிரஸ், அவள் விகடன், மங்கை மலர், குமுதம் சிநேகிதி, தமிழ் கொம்பியூட்டர், இந்தியாருடே, பெண்மணி, அம்புலிமாமா, ஜங்ஷன், காலச்சுவடு, **Sports Star**, கலைமகள், குமுதம் பக்தி, ஆன்மிக ஆலயம், ஞான சிந்தாமணி, ஞானபூமி, ஓம் சரவணபவ, **Chandamama**, சகல சினிமா புத்தகங்கள்.

**$2**

Not go with any other promotion or Special

கனேடிய பாடத்திட்டத்திற்கமைவான

**Complete MathSmart Gr 1-6.**

**English Smart Gr 1-6**

EACH **$11.99**




Not go with any other promotion or Special

உங்களுக்குத் தேவையான சகல படங்களும், திருமணவாழ்த்து மடல், திருமணப் படங்கள், சீனறிப் படங்கள், துணிப்படங்கள் மற்றும் அனைத்துப் படங்களும் உங்கள் விருப்பங்களுக்கேற்ப விரும்பிய அளவுகளில் தரமான முறையில் உடன் FRAME போட்டுத் தரப்படும்



**3238 EGLINTON AVENUE EAST, SCARBOROUGH (Markham & Eglinton)**

OPEN 10 A.M TO 9 P.M

**TEL: 416-265-3605**

---

# SRI PARADISE Catering & Take -out

## 416.269.4509 / 416.509.2454



292 Markham Road, Scarborough, ON

| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
|---|---|---|---|---|---|
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
|---|---|---|
| $2.99 | $1.99 | $2.99 |

### *Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# தத்தம் பிரச்சினைகளை தாமே தீர்த்துக்கொள்ளமுடியும்

தத்தம் வாழ்க்கைப் பிரச்சினைகளால் மற்றவர்கள் துன்புறுவதைக்கண்டு அவர்களுக் காக, அவர்களைவிடக் கூடுதலாக நான் வேதனைப்பட முடியாது. அவர்களுக்காக என்னை நான் மேலதிகமாக வருத்திக்கொள்ளத் தேவையில்லை என்பதை இப்போ நன்கு உணர்கிறேன்.

எமது தாயகத்தில் 26-12-2004 சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உறவுகளைத் திடீரென்று பறிகொடுத்த பலர் இன்னும் துன்பச் சூழலில் உழன்று கொண்டிருப்பது எம் யாவருக்கும் தெரியும்.

உலகமக்கள் இப்போ வாரிக் கொடுக்கும் லௌகிக பண உதவிகளால் மட்டும் அவர்களின் மனப் புண்ணை ஆற்றமுடியாது. நெடுங்கால உள வளத்துணை (Counselling) அவர்களிற்கு அத்தியாவசியம். உளவளத் துணையின் குண மாக்கும் தன்மையையும் அதன் நன்மையைப் பற்றியும் எம்மவருக்கு சரிவரத் தெரியாது என்பது வேதனைதரும் உண்மை. பாதிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உளவளத்துணைச் சேவைகள் கிடைக்க வழி செய்வது எமது முக்கிய கடமை. புலம்பெயர்ந்த உலகத் தமிழ் உளவளத்துணையாளர், மனோதத்துவ நிபுணர்கள் எங்கிருந்தாலும், சுனாமி பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளுக்குக் கொஞ்ச காலத்திற்காயினும் சென்று தொண்டாற்றிட வேண்டும். Universal Community Help எனும் சர்வதேச சமுதாய சேவை நிறுவனத்தில் ரொறொன்ரோவில் 2004 இல் இந்திராணி அபயசேகர வழிநடத்தலில் 13 உளவளத் துணையாளர் பயிற்சி பெற்றுச் சரித்திரம் படைத்தனர். இப்பயிற்சிக்கு உதவிய St. Josph Health Centre சமூக சேவையாளராகிய சுதா குமாரசாமி உளவளத்துணையாளராக இரு மாதங்கள் தொண்டாற்றிட இப்போ மட்டக்களப்பு போயிருக்கிறார். UCH ஸ்தாபகர்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

கௌரிபாலன், லலிதா புரூடி, கலாநிதி புஷ்பா சீவரத்தினமும் தாயகம் செல்லத் திட்டமிட்டுள்ளனர். இழப்புக்களால் தாம் மரத்துப்போய் மன முடைந்து துயரத்தில் மூழ்கித் துன்புறுவதை சிலசமயங்களில் ஒருவர் உணராது இருக்கலாம். வாழ்க்கைச் சவால்களின் சொல்லொண்ணாத் துயரத்தினால் காயப்பட்டு உழல்வதை உணர்ந்தும், அதை அங்கீகரிக்காது அந்தரிக்க லாம். நாம் இங்கு குறிப்பிடுபவை, உள் உணர்வு, ஆன்மீக காயங்களைத்தான். இத்தகைய உட்புற ரணங்கள் வாழ்வின் சக்தியை உலர்த்தி ஆன்மாவையும் முடமாக்கி விடும். உங்களில் முன்பு நீங்கள் அடையாளங்கண்டு இப்போ குணப்படுத்திக் கொண்டிருக்கும் அல்லது ஏற்கனவே குணப்படுத்திவிட்ட காயங்களைப் போன்றவை மற்றவர்களிடம் இருப்பதை நீங்கள் எளிதில் அடையாளங் கண்டு கொள்வீர்கள்.

நீங்களும் முன்பு இதேமாதிரி ரணங்கள் உங்களுக்கு இருப்பதை ஒப்புக்கொள்ளாது அல்லது உணர்ந்த பின்னும் அதை அங்கீகரிக்காது பிடிவாதம் பிடித்ததினால் ஏற்பட்ட துன்பம் பசுமரத்தாணியாய் உள்ளத்தில் இன்னும் பதிந்திருப்பதனால், மற்றவர்களின் ஆன்மா படும் துயரை உடனே உணர உங்களால் முடிகிறது. உங்களால் மற்றவர்களின் துயரத்தைப் பார்க்கவும் முடிகிறது. மனதுள் அடக்கிக் கட்டுப்படுத்தப்பட்ட கோபம் அல்லது துயரம் தான் இதற்குக் காரணம் என்பது உனக்கு நன்கு தெரியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்கள் இதை ஒப்புக்கொள்ளப் போவதில்லை.

துயரப்படும் ஒருவரைக் காணும்போது நீ அவருக்கு உதவ விரும்புகிறாய். உனக்குத் தெரிந்த சகல யுக்திகளையும் கையாண்டு அவருக்கு உதவி, இன்னும் மேலதிக ஒத்தாசைகளையும் செய்து அவரது மனப்பாரத்தை, மனச்சுமையை குறைப்பதாக அவருக்குச் சொல்கிறாய். மனந்திறந்து தனது பிரச்சினையை பகிர்வது நிச்சயம் அவரது மன உளைச்சலைக் குறைக்கும் என்பது உனக்கு நன்கு தெரியும். ஆனால் இவ்வாறு அவர்களின் துயரத்தை நீ



சுட்டிக்காட்டும்போது, அவர்கள் "இல்லை! இல்லை! எனக்கொரு பிரச்சினையும் இல்லை!" என மறுப்பார்கள். மீண்டும் நீ அவர்களின் பிரச்சினையைப் பற்றி விசாரித்தால் அவர்கள் உன்னை உதாசீனம் செய்வார்கள். அவர்களின் துயரத்தை உணர்ந்து நீ துக்கப்படுகிறாய். அவர்களின் துன்பத்தைத் தீர்க்க நீ விரும்புகிறாய். ஆனால் எப்படி அதைச் செய்வது என்பது உனக்குத் தெரியவில்லை அல்லவா? இதோ ஒரு யோசனை! பிரச்சினைப்படுபவர் போக விரும்பாத தூரத்திற்குப் போகும்படி அவரைத் தள்ளி வற்புறுத்தாதே. அவர்களின் உள் ளுணர்வை கவனமெடு. தமக்கென அவர்கள் வகுத்திருக்கும் எல்லைகளை மதி. அவர்களின் தேர்வுகளை ஏற்றுக்கொள். நீ அவர்களை முற்று முழுதாய் நம்புவதை, அவர்கள் உணரப்பண்ணுவது உனது பொறுப்பு. அவர்களின் ரணங்களைக் குணமாக்க அவர்கள் ஆயத்தமானவுடன் அவர்கள் தாமாகவே குணமாகுவார்கள். அப்போ பிரச்சினைத்தீர்வும் ஏற்படும். என்ன இது! இவ்வளவு காலமாகக் கொஞ்சங்கூட மாறாமல், தாம்பிடித்த முயலுக்கு மூன்றுகாலென அப்படியே பிடிவாதம் பிடிக்கிறார் களே என நான் பலமுறை அங்கலாய்ப்பதுண்டு. ஆனால் நாம் செய்யவேண்டியவை சகலதையும் செய்யத் தான் வேண்டும். அன்புடன் துன்புறுபவரை ஆதரிக்கவும் வேண்டும். பின்பு பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்.

மற்றவர்களின் துன்பத்தை நீக்குவது உனது கடமை என நீ இதுவரை நம்பியிருக்கலாம். ஆனால் நேரமும் காலமும் கூடும்போது நிச்சயம் பிரச்சினைத் தீர்வு ஏற்படும். ஏனெனில் தமது பிரச்சினைத் தீர்விற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை செயற்படுத்தும் சக்தி நிச்சயம் ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் மறைந்திருக்கிறது, என்பதைப் புரிந்து கொள். இது ஒவ்வொரு உயிருக்கும் சிருஷ்டியில் இறைவன் அளித்திருக்கும் கொடை. தமது வாழ்வுப் பிரச்சினைகளைத் தீர்த்திட ஒவ்வொருவராலும் நிச்சயம் முடியும் எனும் உண்மையை இன்று நான் மனதார உணர்ந்து ஏற்றுக்கொள்கிறேன்.

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617

லலிதா புரூடி





# மூன்றாம் பக்கம் (Page 3)



நெறியாள்கை: Madhur Bhandarkar
'Trishakti' (1999), 'Chandni Bar' Satta'

நடிகர்கள்
Konkana Sen .... Madhavi
Sandhya Mridul ...... Pearl
Atul Kulkarni ....... Vinayak Mane
Boman Irani .... Deepak Suri
Tara Sharma .... Gayatri;

வித்தியாசமானதலைப்பு, சுவையானதும் கூட. தமிழில் இவ்வாறான கருவைக்கொண்ட படங்கள் வருவது குறைவு.

மூன்றாம் பக்கம் - பத்திரிகையின் மூன்றாவது பக்கம், இதில் வரும் செய்திகள் - பிரபலங்களின் செய்திகள், கிசு கிசுக்கள், கவர்ச்சிப்படங்கள், விருந்து விபரங்கள் போன்றவை. பெங்களூரில் இருந்து மும்பாய் வரும் மாதவி சர்மா இப்பத்திகையின் மூன்றாம் பக்கத்தை நிரப்புகின்றார். விருந்துகளுக்கு செல்வது, பேட்டி எடுப்பது என தனது நாட்களை செலவிடுகிறார்.

இவரது அறையில் மூன்று தோழிகள் (இவருடன் சேர்த்து) பேர்ல் - இவர் விமானப் பணிப்பெண். கோடீஸ்வரரை திருமணம் செய்யவேண்டும் என்பது இவரது ஆசை. மற்றவர் காயத்ரி. ஒரு வெற்றிகரமான நடிகையாக வேண்டும் என்பது இவரது கனவு. காயத்ரிக்கும், பிரபல நடிகருக்கும் உறவு ஏற்படுகிறது. பின்னர் பிரபல நடிகரால் ஏமாற்றப்படுகிறாள். மாதவியும் Gay makeup artist ரேகானும் நண்பர்கள். ரேகான் Gay என தெரிந்தவுடன் வெறுக்கின்றாள். இவை உதிரி சம்பவங்கள்.

தீபக் சூரி பலமுள்ள பத்திரிகை ஆசிரியர். வினயக் அப்பத்திரிகையில் நடப்பு சம்பவங்கள், விசாரணைகள், அதன் பின்னணிகள் என எழுதுபவர்.

ருமேஸ் தர்பார் பிரபல தொழில் அதிபர். அவரது மனைவி அஞ்சலி அனாதை குழந்தைகளுக்கான ஆச்சிரமத்தை நடத்திவருகின்றார்.

அஞ்சலி தீடீரென தற்கொலை செய்து கொள்கின்றார். மரண சடங்குகளில் மாதவி கலந்து கொள்ளகிறார். அங்கு அனைவரும் அடுத்த விருந்து என்ன? எப்போது? யார்? யார்? கலந்து கொள்கிறார்கள்? என கதைப்பதைக் கேட்டு மனம் வெறுக்கின்றாள். பத்திரிகை ஆசிரியரிடம் தன்னை நடப்பு சம்பவங்களுக்கான நிருபராக மாற்றுமாறு கேட்கின்றாள். வினயக்கின் உதவியாளராக பயிற்சி பெறுகின்றாள் மாதவி. ஒரு நாள், வினயக் வேறு விடயத்துக்காக நகரில் இல்லாதபோது, இவர்களுக்கு தகவல் தருபவர் குழந்தைகள் கடத்தல் பற்றிய விபரங்களை மாதவியிடம் கூறுகின்றார்.

மாதவியும் நகர் காவல் அதிபரும் அங்கு சென்ற பொழுது பல பிரபலங்கள் சம்பந்தப்பட்டுள்ளதை கண்டு பிடிக்கின்றனர். எவரையும் கைது செய்ய முடியாமல் மேலிடம் தடுத்து விடுகிறது.

அன்றிரவே தனது கட்டுரையை ஆசிரியரிடம் கையளிக்கின்றாள். ஆசிரியர் பத்திரிகை அதிபர-ிடம் சென்று அனுமதி கேட்கின்றார். இக் கட்டுரையின் அவசியம் பற்றியும் தெரிவிக்கின்றார்.

அவரது பதில் - இதில் சம்பந்தப்பட்டுள்ள ருமேஸ் தர்பார் எங்களது பத்திரிகையின் பெரும் பங்கு விளம்பரதாரர். எனவே மாதவியை வேலையை விட்டு வெளியேற்று. கட்டுரையை பிரசுரிக்காதே.

நகர் திரும்பும் வினயக், மாதவியிடம் சில உண்மைகளை கூறுகின்றார். அஞ்சலியின் தற் கொலைக்கு காரணம் - ருமேஸ் தர்பார் அஞ்சலி யின் ஆசிரமத்து குழந்தைகளுடன் உறவு கொள் கிறார். இது அஞ்சலிக்கு தெரிந்து விடுகிறது.

## வானரன்

ஒரு பொழுதும் கட்டுரையுடன் முழு தடயங்களையும் கொடுக்கக்கூடாது. அதுவே உனக்கு எதிராக திரும்பிவிடும். அத்துடன் வினயக் கூறும் முக்கியவிடயம் “ We have to be in the system, to change the system.” என்பது.

மாதவி இப்பொழுது வேறு ஒரு பத்திரிகையில் மூன்றாம் பக்கத்தை நம்பிக்கையுடன் நிரப்பிக் கொண்டிருக்கின்றார்.

‘மாதுார்’, ‘சாந்தினி பார்’ படங்களிலும் செக்ஸை மூலதனமாக பாவித்துள்ளார். இதிலும் அதே நிலை தான். இது ஒரு வியாபார தந்திரமே. பால-ியல் சம்பந்தப்பட்ட சமூகப்பிரச்சினைகளை கருவாகக் கொள்வதால் இது இலகுவாகிறது.

‘பல பிரச்சினைகளை கூற முற்படும் பொழுது, பிரச்சினைகள் பற்றிய தெளிவான பிரக்ஞை இருந்தும் எதுவும் ஆழமாக கூறமுடியாமல் போயுள்ளது. குழந்தைகள் மீது பாலியல் வன்முறை, வர்த்தகமயமாதலும் பத்திரிகையிய லும், மேல்தர வர்க்கத்து வண் உணர்வுகள் என ஆழமான பிரச்சினைகள் இருந்தும், வானம் இருண்டு, மழை துாறியது போல் உள்ளது.

‘கொன்கனா சென், அதுல் குல்கர்னி, பொமன்



இரானி ஆகியோர் இயல்பாக நடித்துள்ளனர்.

‘மூன்றாம் பக்கத்துாடாக இந்த சமூகத்தைப்பார்த்து சிரிக்க வைக்கும் இயக்குனர், மேல்தர வர்க்கத்து வண் உணர்வுகள் மீது கவலை கொள்ள செய்வதுடன், கவனமும், அவதானமும் தேவை என எச்சரிக்கவும் செய்கிறார். இப்படத்தை N.N Videoவில் பெற்றுக் கொள்ளலாம்.

கடந்த சில வாரங்களாக எனது நண்பர் ஒருவர் இயக்குனர் சிறீதரின் ‘அலைகள்’ படம் ஏன் பயங்கர தோல்வியடைந்தது என கேட்டு நச்சரித்து கொண்டிருந்தார். தேடிப்பிடித்து ஜெயா அன்ட் பிறதர்ஸில் மீண்டும் ஒரு தடவை பார்த்தேன்.

வழமையான மசாலக் காட்சிகளுடன், சிறீதர் கூறமுட்பட்ட நல்ல விடயம், வன்புணர்வுக்குட்பட்ட யுவதியை ஒருவர் ஏற்றுக்கொள்கிறார். ஆனால் அதனை ஒருவரும் அன்று ஏற்றுக் கொள்ளவில்லை. அது அன்று.

சில வாரங்களுக்கு முன் ஒருவர், தனது மனைவ-ியின் பாடசாலை காதலை தெரிந்து கொண்டவு டன், மனைவியை வீட்டை விட்டே துரத்தி விடுகிறார். இது இன்று. அன்றைய மனோ நிலையும், இன்றைய மனோநிலையும் ஒன்றே.

‘ஆட்டோகிராப்’ எல்லாம் ஆண்களுக்கே. ‘அலைகள்’ இப்பொழுதும் அடிக்க வேண்டும்.

## Oscar Awards – Clint Eastwood Night

February 27,2005 9:00 p.m (Eastern Time)

The envelope goes to Client Eastwood, Client Eastwood, Client Eastwood………

இம் முறை சில விருதுகள் கனடியர்களுக்கு கிடைத்துள்ளது.

1. Best Animated Short Film – Chris Landreth இப்படம் Copper Heart Entertainment ம், கனடிய தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனமும் இணைந்து தயாரித்துள்ளனர்.
2. Paul Haggis – co-producer Million Dollar Baby. இவர் லண்டன், ஒன்றாரியோவைச் சேர்ந்தவர்.
3. இறுதித் தேர்வுக்கு தெரிவு செய்யப்பட்ட முதல் ஆபிரிக்க கனடியரான Hubert Davis , சிறந்த Documentry Short க்கான விருதை தவறவிட்டுள்ளார்.

இரண்டு கறுப்பின அமெரிக்கர்கள் சிறந்த நடிகர், சிறந்த துணை நடிகர் விருதை தட்டிச் சென்றுள்ளனர்
LEAD ACTOR: Jamie Foxx, படம் - Ray
SUPPORTING ACTOR: Morgan Freeman, படம் - Million Dollar Baby
சிறந்த DOCUMENTARY FEATURE: Born into Brothels. கல்கத்தா பாலியல் தொழிலாளிகள் மத்தியில் குழந்தை பாலியல் தொழிலாளிகளும், அவர்கள் கல்லவியின்மையும், கவனிப்பின்மையும் என்பது பற்றி NewYrok Photo Journalist Zena Briski and Ross Kauffman ஆகியோர் தயாரித்த படம்.

கவர்ச்சி, விளம்பரம் என்பனவே பல, பல விருதைகளை வழமை போல் தட்டிச் சென்றுள்ளன.

## WINNERS FROM THE 77TH ANNUAL ACADEMY AWARDS

FEATURE FILM: படம் - Million Dollar Baby
DIRECTION: Clint Eastwood, படம் - Million Dollar Baby
LEAD ACTOR: Jamie Foxx, படம் - Ray
LEAD ACTRESS: Hilary Swank, படம் - Million Dollar Baby
SUPPORTING ACTOR: Morgan Freeman, Million Dollar Baby
SUPPORTING ACTRESS: Cate Blanchett, படம் - The Aviator
ANIMATED FEATURE: The Incredibles
ANIMATED SHORT: Ryan
FOREIGN FEATURE: The Sea Inside
DOCUMENTARY FEATURE: Born into Brothels
LIVE ACTION SHORT: Wasp
ART DIRECTION: The Aviator
CINEMATOGRAPHY: The Aviator
FILM EDITING: The Aviator
VISUAL EFFECTS: Spider-Man 2
DOCUMENTARY SHORT: Mighty Times: The Children's March
ORIGINAL SCREENPLAY: Charlie Kaufman, Michel Gondry and Pierre Bismuth, Eternal Sunshine of the Spotless Mind
ADAPTED SCREENPLAY: Alexander Payne and Jim Taylor, Sideways
ORIGINAL SCORE: Jan A.P. Kaczmarek for Finding Neverland
ORIGINAL SONG: Al Otro Lado Del Rio by Jorge Drexler from The Motorcycle Diaries
SOUND MIXING: Ray
SOUND EDITING: The Incredibles
COSTUME: The Aviator
MAKEUP: Lemony Snicket's A Series of Unfortunate Events
LIFETIME ACHIEVEMENT: Sidney Lumet
JEAN HERSHOLT HUMANITARIAN AWARD: Roger Mayer




வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்



Kanthan: 416.291.3997





• No Spraying • No Smelling • No Moving



SMILE

• BUSINESS PLANS
• CORPORATE TAX PREPARATION OF FILING
• PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
• ACCOUNTING, TAXATION
• SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days

# குறை ஒன்றும் இல்லை கண்ணா

## இசையாகி வந்த தேவதை மறைந்தது - 3

மீரா என்ன சங்கீத வித்வானாகவா தொழில் நடத்த முடியும்? எம்.எஸ். மீராவாகவே வாழ்ந்தார். அது என்றோ தொடங்கியாயிற்று. சதாசிவம் எம்.எஸ்ஸை மணந்தது, எம்.எஸ்ஸை வைத்து பணம் பண்ண அல்ல. எம்.எஸ் இன் சங்கீத வாழ்க்கையும் அர்ப்பணமும் எவ்வடிவம் எடுக்க வேண்டும் என்று சதாசிவம்தான் நிர்ணயித்தது. எம்.எஸ் இன் மனநிலையும் அதை மகிழ்ச்சியுடன் வரவேற்கும் ஒத்த சுபாவம் கொண்டது. எங்கு எந்த அழைப்பை ஏற்றுக் கொள்வது, மேடையில் என்ன பாடுவது, என்பதை எல்லாம் தீர்மானிப்பது சதாசிவம்தான். அதனால் தான் எம்.எஸ் இன் பாட்டு மேடையில் பாவமும் பக்தியும் நிறைந்ததாக இருக்கும். மனதை ஈர்ப்பதாக இருக்கும். தன் வித்துவத்தின் பிரபாவங்களைக் காட்டும் பகட்டு, மேதமை இராது. செம்மங்குடியே சொல்வார், ‘எம்.எஸ்ஸிடம் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது என்ற ஒரு தீர்மானம் இருக்கும். ஸ்வரம் நிரவல் எல்லாவற்றிற்கும் ஒரு அளவு இருக்கும்.’

இந்தியா முழுவதும் புகழ் பெற்ற ஒரு சிகர சங்கீத மேதை, நிகரற்ற இனிய குரல் வளமும் கொண்ட ஒருவர், பாடியது கேட்பவரை மகிழ்விக்க, கேட்கும் மனங்களை மேன்மைப் படுத்த, பணம் சம்பாதிக்க அல்ல. பாட அழைப்பார் யாராயிருந்தாலும் எவ்வளவு வேண்டும் என்று கேட்பதில்லை. எவ்வளவு கொடுத்தாலும், அப்பணத்தை அப்போதே தர்மம் செய்துவிடுவதே இத்தம்பதிகளின் வாழ்க்கை தர்மமாக இருந்தது. பணத்தை வீட்டுக்கு கொண்டுவந்து பின் யோசித்து யாருக்கு எவ்வளவு கொடுக்கலாம் என்று யோசிப்பதில்லை. ‘யார் கண்டார், மனசு மாறினாலும் மாறிவிடும். அதனால் அப்போதே கொடுத்துடணும்’ என்பார் எம்.எஸ்.

> தன்னை அண்டியவர்களுக்கு கஷ்டம் என்றால், தன்னிடமிருக்கும் புடவை, வளையல், சங்கிலி ஏதாகிலும் உடனே கொடுத்து, ‘இதை வச்சுண்டு ஏதாவது பண்ணிகோம்மா’ என்பாராம்

இதுவரையில் எம்.எஸ். பாடி தர்மத்திற்காக என்று பணம் வாங்காது விட்டது இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று பத்திரிகைகளில் ஒரு கணக்கு சொல்லப்பட்டது. இது என்ன கணக்கோ? வருடா வருடம் பத்தாயிரக் கணக்கில் விற்றுக் கொண்டிருக்கும் விஸ்ணு சகஸ்ரநாமம், வெங்கடேச சுப்ரபாதம், வைஷ்ணவ ஜனதோ, ஹரி தும் ஹரோ, மீரா பஜனைப் பாடல்கள், இவையெல்லாம் எந்த கணக்கில் சேரும்? அவர் வாரி வாரி வழங்கினாரே தவிர தனக்கென எதுவும் சேர்த்துக் கொள்ளவில்லை. மிக எளிய வாழ்க்கை. பத்தாயிரம் பேருக்கு அன்னதானம் செய்பவர் தான் சாப்பிடுவது தன் வயிறளவு தானே? எவ்வளவு சாப்பிட முடியும்? எவ்வளவு தேவை? தான் இருக்க ஒரு சிறிய வாடகை வீடு போதும்.

அவருக்கு வருத்தங்கள், குறைகள் ஏதும் உண்டா என்று கேட்கப்பட்ட போது, ‘ஜனங்கள் இவ்வளவு கஷ்டப்படறதைப் பார்த்தா வேதனையா இருக்கு. நாம் என்ன செய்யமுடியும்? நம்மால முடிந்த அளவு நம்மைச் சுற்றி இருக்கறவாளுக்கு கேட்கறதை கொடுத்து அவா கஷ்டத்தைக் கொஞ்சம் குறைக்கலாம்’. அப்படித்தான் எம்.எஸ் வாழ்ந்து வந்தார். தன்னை அண்டியவர்களுக்கு கஷ்டம் என்றால், தன்னிடமிருக்கும் புடவை, வளையல், சங்கிலி ஏதாகிலும் உடனே கொடுத்து, ‘இதை வச்சுண்டு ஏதாவது பண்ணிகோம்மா’ என்பாராம்.

ஒரு சமயம் பங்களூரில் ஒரு கச்சேரிக்குப் போயிருந்தார். அப்போது, அவரது குடும்ப நண்பர் நவரத்ன ராவ், உடல் நிலை சரியில்லாத காரணத்தால் வரமுடியவில்லை என்று கேள்விப்பட்டு, உடனே நவரத்ன ராவ் வீட்டுக்குச் சென்று, அவருக்காக பாடினாராம். இன்னொரு முறை மைசூரில் கணபதி உத்சவம் ஒரு நண்பரின் வீட்டில் நடந்ததாம். கச்சேரிக்குப் பிறகு, நண்பரின் வீட்டில் எம்.எஸ் தம்பதியினருக்கு விருந்து. விருந்தில் ஸந்திகே என்னும் விசேஷ தயாரிப்பு. மைசூருக்கே சொந்தமான delicacy அது. சாப்பிடும் போது எம்.எஸ், ‘ராஜாஜிக்கு இது ரொம்ப பிடிக்கும். சந்தோசமாய் சாப்பிடுவார். கொஞ்சம் கட்டிக் கொடுங்கோ. அவருக்கு எடுத்துண்டு போறேன்’ என்று கேட்டு வாங்கிச் சென்றாராம்.

ஒரு முறை மும்பை சண்முகானந்த ஹோலில் எம்.எஸ்ஸின் கச்சேரி. அப்போது மும்பையில் செம்பை வைத்தியனாதய்யர் இருப்பதைக் கேள்விப்பட்டு, அவர் தன் பாட்டைக்கேட்க வரவேண்டும் என்று எம்.எஸ் கேட்டுக் கொண்டாராம். செம்பை வருவதற்கு நேரமாயிற்று. எம்.எஸ் பாடிக்கொண்டிருந்தபோது செம்பை வருகின்றார். எம்.எஸ் அவர் வருவதைப் பார்த்து, பாட்டை நிறுத்தி, எழுந்து நின்று கைகூப்பி நமஸ்காரம் செய்து, ‘கருண செய எந்து தாமஸம் கிருஷ்ணா’ என்று பாடிக் கொண்டே அவரை வரவேற்றாராம். அந்த சமயத்தில் பொருத்தம் என்பது போக, அது செம்பையின் விருப்பமான கிருதியும், அவர் தன் கச்சேரிகளை அந்த கிருதியுடன் தான் முடிப்பதும் வழக்கம்.



